உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு 2030 கார்த்திகை 19 ஞாயிற்றுக்கிழமை (05-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:7

## 2 தனியார் வங்கிகளில் நேற்று குண்டு வெடிப்பு!

கொழும்பு, டிசெ. 5

கொழும்பில் உள்ள இரண்டு தனியார் வங்கிகளில் நேற்றுப் பகல் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. எனினும் இந்தச் சம்பவங்களினால் பெரும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு ''ரவுண் ஹோல்'' பகுதியில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கியில் முதலாவது குண்டு பிற்பகல் ஒரு மணிக்கு வெடித்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோர் பாதுகாவலர் சங்கம் இன்று உண்ணாவிரதப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ். மாவட்ட கைதாகிக் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக முன்றலில் இன்று காலை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை இந்தப் போராட்டம் இடம் பெறும்.

குடாநாட்டில் கைதாகிக் காணாமற் போனவர்களில் 355 பேரைத் தேடித்தர முடியாதவர்கள் எனத் தெரிவித்துக் காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்பியிருப்பதைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட கைதாகிக் காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் நடத்தும் இந்தப் போராட்டத்தில் வந்து கலந்துகொள்ளுமாறு வர்த்தக சமமேளனம், வர்த்தக ஊழியர்சங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள், பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம், குருமார் ஒன்றியம், பார ஊர்திச் சங்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இரு பிரதான கட்சிகளுக்கும் ஆதரவு வழங்குவது இல்லை

## கூட்டணி நேற்று தீர்மானம்

கொழும்பு, டிசெம்பர் 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவையோ ஐ. தே. க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையோ ஆதரிப்பது இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு நேற்று முடிவு செய்தது.

தமிழ் மக்கள் இந்த இரு வேட்பாளர்களையும் தேர்தலில் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மத்திய செயற்குழு அடுத்த சில நாள்களில் மீண்டும் கூடி தமிழ் மக்கள் எவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் உள்ள மாகிவெல நாடாளுமன்ற உறுப்பினர் விடுதியில் நேற்றுக் காலை 11 மணிக்கு ஆரம்பமாகிப் பிற்பகல் 6-30 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது.

தமிழர்விடுதலைக்கூட்டணி எம்.பிக்கள் மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் இந்தக்

(14 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப இரண்டும் கெட்டான் நிலைதான்......!

## துப்பாக்கிச் சூடு மூவர் காயம்

கொழும்பு, டிசெ. 5

சப்பு கஸ்கந்த ஐ. தே க. அலுவலகம் மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாத

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி ஆதரவு வாசுவுக்கு?

கொழும்பு டிசெ. 5

தமிழர்விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி மீண்டும் கூடும் என்றும் அப்பொழுது ஜனாதிபதித் தேர்தலில் புதிய இடது சாரி முன்னணி வேட்பாளர் வாசுதேவ நாணயக்காரவை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்படலாம் என்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டதாகவும் — தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தாயகக் கோட்பாடு குறித்து வாசுதேவ நாணயக்கார கொண்டுள்ள நிலைப்பாடு குறித்துக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (இ)

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை: மடுச்சந்தி ஊடாக வினாத்தாள் நேற்று எடுத்துச்செல்லப்பட்டது!

வவுனியா டிசெ. 5

வன்னிப் பகுதிக்கான ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சை வினாத்தாள்கள் நேற்று வவுனியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று பகல் 12 மணிக்கு மடுச்சந்தி ஊடாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் வன்னிக்கு இந்த வினாத்தாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

வினாத்தாள்களை எடுத்துச் செல்லும் பாதை தொடர்பாக நிலவிய இழுபறியால் வினாத்தாள்களை அனுப்பி

[14 ஆம் பக்கம் பார்க்க]

## ரணிலுக்கு ரெலோ ஆதரவு

கொழும்பு, டிசெ. 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பது என்று ரெலோ அமைப்பு முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ரெலோ அமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த நாம் எடுத்த முயற்சிகள் பல்வேறு காரணங்களினால் வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது நிலைப்பாடு என்ன என்பதை தெரிவிக்க வேண்டியுள்ளது. ஆளும் கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் நிலையில் தமிழினம் இல்லை.

1994 இல் சமாதானக் கொடி தாங்கி வந்தவர் இன்று தொடர்ந்து போர் முரசு கொட்டிக் கொண்டிருக்கிறார். சமாதானம் ஏற்படும் என்று நம்பி 1994 இல் வாக்களித்த தமிழ்மக்கள் ஓர் ஆண்டுக்குள்ளேயே படுமோசமாக ஏமாற்றப்பட்டனர்.

கடந்த நாலரை ஆண்டுகளாக தமிழ்மக்கள் அனுபவித்து வந்திருக்கும் துன்ப, துயரங்கள் சொல்லில் அடங்காதவை தொடர்ந்து தின

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல்

திருகோணமலை, டிசெ. 5

திருகோணமலை அலஸ் தோட்டம் துவரங்காடு பகுதியில் உள்ள முகாம் ஒன்றின் மீது புலிகள் நேற்று முன்தினமிரவு தாக்குதல் ஒன்றை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 6 கடற்படையினரும் ஒரு பொலீஸாரும் உயிரிழந்தனர் என்றும் — மேலும் 7 பொலீஸாரும் 3 கடற்படையினரும் காயமடைந்ததாகவும் — நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

துவரங்காடு பகுதியில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றில் அமைந்திருந்த முகாமே தாக்குதலுக்கு உள்ளானது. இந்த முகாமில் கடற்படையினரும் பொலீஸாரும் கூட்டாக கடமையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6-5-21)

## செம்மணிப் புதைகுழி தொடர்பான நிபுணர் அறிக்கை நாளை நீதிமன்றில்

யாழ்ப்பாணம், டிசெ. 5

செம்மணிப்புதைகுழிதோண்டும் பணிகளில் ஈடுபட்ட நிபுணர் குழுவின் அறிக்கை நாளை யாழ். நீதிமன்றத்தில் யாழ் மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் கிருஷாந்தி கொலைவழக்கின் குற்றவாளிகள் ஐவரும் காட்டிய 25 புதைகுழிகளும் கடந்த செப்ரெம்பர் மாதம் தோண்டப்பட்டன.

இந்தப் பணிகளில் ஈடுபட்ட நிபுணர்களை டிசெம்பர் 6 ஆம் திகதி யாழ் நீதிமன்றத்தில் இது தொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க மேலதிக நீதிவான் அனுமதி வழங்கி இருந்தார்.

புதைகுழி தோண்டும் பணிகள் பூர்த்தியுடைந்ததைத் தொடர்ந்து செம்மணியில் கடந்த செப். 22 ஆம் திகதி தள. நீதிமன்றம் கூடியபோது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் தடயப் பொருள்களை ஆய்வு செய்ய கால அவகாசம் தேவையென நிபுணர்கள் விண்ணப்பித்தனர்.

அப்பொழுது நீதிவான் டிசெம்பர் 6 ஆம் திகதி அறிக்கையைச் சமர்ப்பிக்க அனுமதி வழங்கினார். (இ-5)

## மேலும் இரு சிப்பாய்கள் இன்று விடுவிக்கப்படுவர்

வவுனியா, டிசெ. 5

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளிடம்சரணடைந்தவர்களில் மேலும் இரு இராணுவச் சிப்பாய்கள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் இருவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் இவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலன்னறுவையைச் சேர்ந்த எம். டபிள்யூ. விஜயவிக்கிரம சிங்க, குணரத்ன பண்டார ஆகிய சிப்பாய்களே விடுவிக்கப்படவுள்ளவர்களாவர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டுகடந்த வாரம் 7 இராணுவச்சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

SHAMROCK
2000ஆம் ஆண்டு
புதிய வகுப்புகள்
Gr.4 முதல்O/L வரை
ஆரம்பம்: 06-12-1999
Mon 3 00 p m.
(சி/10100)



லிபேட்டி அச்சுவேலி
பிரபு – மீனா
நடித்த
மனம் விரும்புதே உன்னை
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(71461)



ராஜா
யாழ்ப்பாணம்
சரத்குமார், சுகன்யா
மற்றும் பலர் நடித்த
மகாபிரபு
10-30, 2-00, 5 00
(சி/10032)


# நிலக்கடலை செய்கை ஊக்குவிப்பு

தென்மராட்சி, டிசெ. 5

பளைப் பிரதேசத்தில் நிலக்கடலை, சோளன் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு பளைப் பிரதேச செயலகத்தினால் இவ்வருட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் உதவியுடன் பளை விவசாயத் திணைக்களத்தினர் பிரதேசத்தில் உள்ள நாற்பது பயனாளிகளுக்கு நிலக்கடலை, சோளன் ஆகிய விதைகள் அவற்றிற்கான உரங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு பயனாளியும் தலா கால் ஏக்கர் காணியில் இவற்றினைப் பயிரிட்டுள்ளனர். [ஐ-117]


நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்:
11-00, 2-30, 5.15
(புதிய நேரம்)
(71550)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### புதிய மாணவர்கள் பதிவு செய்தல்

**1999 / 2000**

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு கற்கை நெறிகளுக்கு 1999/2000 கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவைப் பின்வரும் திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

1. வர்த்தகம் / முகாமைத்துவம்– 13 – 12 – 1999
2. பௌதீக விஞ்ஞானம்/ விவசாயம் – 14 – 12 – 1999
3. உயிரியல் விஞ்ஞானம்/ மருத்துவம்– 15 – 12 – 1999
4. கலை– 16 – 12 – 1999

பதிவு செய்யும் பொழுது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அ) பூரணப்படுத்தப்பட்ட பதிவு விண்ணப்பப்படிவம்

ஆ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட அனுமதிக் கடிதம்.

இ) பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதியும் போட்டோப் பிரதியும்)

ஈ) பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப் பிரதியும் போட்டோப் பிரதியும்)

உ) போட்டோ – 08 (கறுப்பு, வெள்ளை, அளவு 2X2½)

ஊ) தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி.

எ) க. பொ. த. (உயர் தரம்) பெறுபேறு (மூலப் பிரதியும் போட்டோப் பிரதியும்)

ஏ) கட்டணம்:-

| | |
|---|---|
| விஞ்ஞான பீடம் | – 600/- |
| மருத்துவ பீடம் | – 600/- |
| விவசாய பீடம் | – 600/- |
| கலைப் பீடம் | – 300/- |

(புவியியலை ஒரு பாடமாகக் கற்க விரும்புவோர் ரூ. 300 மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்)

தபால் மூலம் பதிவு செய்ய விரும்புவோர், அனுப்பிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கையொப்பத்தை சமாதான நீதவானால் உறுதிப்படுத்தி, உரிய கட்டணத்தை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் எடுத்த காசுக் கட்டளையுடன், உரிய ஆவணங்களையும் சேர்த்து 27-12-1999க்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல்வேண்டும்.

மேற்குறித்த திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ பதிவு செய்யாதவர்களின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு, அவ்விடத்திற்கு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பதிவாளர்.

(சி/10103)

# மருந்துகளைப் பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டி இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 5

கோக்குவில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அரசமருத்துவமனையில் சில மருந்து வகைகளைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய வகையில் குளிர்சாதனப் பெட்டி வசதிகள் இல்லாத காரணத்தினால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அவசர சிகிச்சைகளைப் பெறமுடியாத வகை

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவராசா புஷ்பராணி

(வவா)

திருநெல்வேலி, வளாக ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சி. புஷ்பராணி அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (5-12-99) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ சிவராசா (செல்வராசா)
(கணவர்)

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி,

(71557)

## வேலுப்பிள்ளை சதாசிவம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஒட்டுமடம் தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சதாசிவம் (இளைப்பாறிய அதிபர்) 4-12-99 அன்று காலமானார்.

இவர் திருமதி சதாசிவம் பொன்னம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் பிறேம்குமார் (செயலகம் - யாழ்ப்பாணம்) திருமதி சரவணபவானந்தன் பிறேமா (ஆசிரியை யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), நிமலன், (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), பவானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவணபவானந்தன், (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி), மல்லிகாதேவி, கலாதேவி, றங்நாதன் (முன்னாள் கிராம உத்தியோகத்தர் அராலி தெற்கு - சவூதி அரேபியா) ஆகியோரின் மாமனாரும். ஐயாத்துரை, சிவஞானம், சுப்பிரமணியம் (இந்தியா) ஆகியோரின் சகோதரரும். நிரோஜனன், அனோஜனன், சாறுஜனன், மதுமிதா, மயூரதி சேந்தன், ஜனலக்சன், பிருந்தாபன், வாக்சலியா, பத்மன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (5-12-99) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3-00 மணிக்கு தகனக்கிரியைக்காக சோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினருக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
ச. பிறேம்குமார்
ச, நிமலன்

15/4 தேவாலய வீதி,
ஒட்டு மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/10105)

## விஸ்வரட்ணம் சிவலோகநாதன்

(ஆர்த்தி ஜுவலர்ஸ் உரிமையாளர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், 36, மாதம்பிட்டி வீதி, கொழும்பு 15ஐ வதிவிடமாகவும் கொண்ட விஸ்வரட்ணம் சிவலோகநாதன் அவர்கள் 03-12-1999 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வரட்ணம்— நாகரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் ஆர்த்தி, ருக்மாங்கன், சாரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சரவணமுத்து மனோன்மணியின் (அத்தை) மருமகனும், காலஞ்சென்ற சரவணமுத்து, - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும் சறோஜினிதேவி, சாந்தாதேவி, காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றும் சந்திராதேவி, சூரியகுமாரி, நிர்மலாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும். தெட்சணாமூர்த்தி, (ஆசிரியர் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), குலசிங்கம் (வர்த்தகம்) காலஞ்சென்ற பரராஜசிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), மற்றும் சோமபாலன் (சிறீரூபா ஜுவலர்ஸ்), சிவநேசன் (விவசாயப்பண்ணை முகாமையாளர், திருநெல்வேலி), Dr. பாலச்சந்திரன் (பிரதிப்பணிப்பாளர் கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களம், பேராதனை), மகேஸ்வரி, Dr. குக்தாசன் (கண்சத்திரசிகிச்சை நிபுணர் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற MP கணேசன், இந்திராணி (ஆசிரியை, கண்டி விகாரமாதேவி மகளிர் வித்தியாலயம்), சிறீபதி (முன்னாள் தேயிலைக் கட்டுப்பாட்டுச்சபை உத்தியோகத்தர்) கலைவாணி ஆகியோரின் சகலனும் மயூரதன் (ஆசிரியர், பரஞ்சோதி வித்தியாலயம்), நிஷங்கா, கிரிதர், சர்மிதா, ரஜீவ், ஜெசிந்த், வர்ணன், ரிசாங்கி, காயி ஆகியோரின் தாய்மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [5-12-99] ஞாயிற்றுக்கிழமை பி ப 4மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஜெகதீஸ்வரி.
(மனைவி)

'கோகுலம்'
மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

[71545]

# காணவில்லை

வேலணை 6 ஆம் வட்டாரம் துறையூரை வதிவிடமாகக் கொண்ட கோபாலு சிவனேஸ்வரன் (வயது-16) என்பவர் கடந்த 30-11-99 அன்று மாலை 3.30 மணிக்குப் பின்னர் துறையூரிலிருந்து ஆண்களுக்கான லுமாலா துவிச்சக்கரவண்டியுடன் அராலிச் சந்தி நோக்கிச் சென்றவர் மீளவும் வீடு வந்து சேரவில்லை. இவர் காணாமற்போன அன்று வெள்ளைநிற அரைக் காற்சட்டையும், வெள்ளை நீல நிற ரீசேட்டும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரிகளுடன் தொடர்புகொண்டு தகவல் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.


(1) தலைவர், வேலணை பிரதேச சபை,
வேலணை.
தொலைபேசி இல: 070—212741

(2) அமைப்பாளர், அரசியல் செயலகம்,
ஈழ மக்கள் ஜனநாயக கட்சி,
துறையூர், வேலணை.

தகவல்:-
தலைவர்.
வேலணை பிரதேச சபை.
(ந கருணாகரகுருமூர்த்தி) (சி/10102)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1972 – 08 – 07



மறைவு 1999 – 11 – 05

அமரர்

## இராசதுரை சிறிதரன்

(அப்பன்)

எம்மையெல்லாம் சீராட்டி, தாலாட்டிப் பாசமாய் வளர்த்தெடுத்து இந்த வையகத்தில் தலை நிமிர்ந்து வாழ வைத்த எம் கண்ணிற்கினிய அப்பாவே! இனி எப்போ உங்கள் அன்புமுகம் காண்போம்?

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாள் தோறும் இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவினால் துயருறும்
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
மச்சான், மச்சாள், சகோதரர்கள்.

687/29A, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

[71555]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதி இல. 18 (அருள் ஆச்சிரமத்துக்கு முன்பாக) சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**கிறிஸ்ரி இராஜநாயகம்**

இல. 18, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

[71518]


## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள திணைக்களத் தலைவர்கள், உத்தியோகஸ்தர்களுக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாதத்தின் இறுதி வியாழக்கிழமைகளில் நடைபெறும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-180)


# பாராட்டுகின்றோம்

எமது ஆசிரியர்
மதுரகவி

**காரைஎம்.பி.அருளானந்தம்**

அவர்கள் ஜேர்மனியிலிருந்து வெளியாகும் ''மண்'' சஞ்சிகையால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்கள்.
யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

[71520]



RAFA
நுண்கலைப்பீட

சகல மாணவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள்
பிரிவு II ஆரம்பம்
காலம்: 07-12-1999

**VIBGYOR**
கல்வி நிலையம்

இல. 10/2, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[71502]


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# மீள் கேள்வி அறிவித்தல் - 2000

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் விநியோகித்தல்: | 09-12 1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு. |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும்: | 10-12-1999 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்கு. |
| கேள்வி திறக்கும் திகதியும் நேரமும்: | 10-12-1999 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு. |

இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| சந்தை/ இறைச்சிக் கடைகள் | கடையின் மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| காக்கைதீவுச் சந்தை, (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 200/- | 1,000/- | 20 000/- |
| மாட்டிறைச்சிக் கடை, நவாலி பிரசாத் சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 40,000/- |
| ஆட்டிறைச்சிக் கடை, நவாலி பிரசாத் சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 8,000/- |
| ஆட்டிறைச்சிக் கடை. சாவற்கட்டு சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 8,000/- |
| கருவாட்டுக் கடை, சாவற்கட்டு சந்தை. | 100/- | 200/- | 1,000/- | 1,500/- |
| **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| பண்டத்தரிப்பு பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 200/- | 1,000/- | 150,000/- |
| மாட்டிறைச்சிக் கடை, பண்டத்தரிப்பு பொதுச் சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 40,000/- |
| ஆட்டிறைச்சிக் கடை, பண்டத்தரிப்பு பொதுச் சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 8,000/- |
| கருவாட்டுக் கடை இல. 1 பண்டத்தரிப்பு பொதுச் சந்தை. | 100/- | 200/- | 1,000/- | 5,000/- |
| கருவாட்டுக் கடை இல. 2 பண்டத்தரிப்பு பொதுச் சந்தை. | 100/- | 200/- | 1,000/- | 5,000/- |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| இளவாலை சந்தை, (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 200/- | 1,000/- | 50,000/- |
| மாகியப்பிட்டி சந்தை, (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 200/- | 1,000/- | 75,000/- |
| மாட்டிறைச்சிக் கடை, மாகியப்பிட்டி சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 50,000/- |
| ஆட்டிறைச்சிக் கடை, மாகியப்பிட்டி சந்தை. | 250/- | 200/- | 1,000/- | 20,000/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,
( ஜே. பி. யூ. எம். )
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம்,
மானிப்பாய். 02—12—1999

(சி/10077)


# அறிவித்தல்

102 சீ, டாம் வீதி, கொழும்பு – 13 இல் அமைந்த

**"ஈஸ்வர பகவான் அன் கம்பனி"**

முல்லைத்தீவில் தாக்கி அழிக்கப்பட்ட

**"பிறின்ஸ் ஒவ் காஸ்" கப்பலில்**

எமது நிறுவனத்துக்கூடாகப் பொருள்களை ஏற்றி அனுப்பியவர்கள் உங்கள் நட்ட ஈட்டுக்கான விவரங்களையும் அதற்குரிய ஆவணங்களையும் 10—12—1999 –க்கு முன்னதாக

102சீ, டாம் வீதியில் இருக்கும் எமது நிறுவனத்திலோ 100 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்திலோ

அவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

– முகாமையாளர்

**ஈஸ்வர பகவான் அன் கம்பனி.**

[71489]



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவிலைச் சேர்ந்த

**சிவஸ்ரீ சண்முகசுந்தர ஸ்ரீஸ்கந்தராஜ குருக்கள்**

27 - 09 - 99 இல் யாழ். மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு நாம் மிக மகிழ்வுறுவதுடன் அவர்தம் சேவை வளம் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

திரு. க. தேவராஜா
வர்த்தகத்துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

இரா. செல்வவடிவேல்
ஆசிரியர்

எஸ். சந்திரமௌலி
கல்வித் திணைக்களம் வலயம் - 01

சண். வாமதேவன்
உப அதிபர், கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்

ஞான. திருக்கேதீஸ்வரன்
ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி

ஞான திருக்கேதீஸ்வரன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

(71517)


# சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 26 – 01 – 1952



மறைவு 26 – 10 – 1999

கடந்த 26 - 10 - 1999 இல் சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவி

**திருமதி பத்மலோஜினி சிவசண்முகநாதன்**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (05 - 12 - 1999) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.

நன்றி

நா. சிவசண்முகநாதன்
(மக்கள் வங்கி, யா/ பல்கலைக்கழக கிளை)

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

[71473]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HARVEST

## ஹாவஸ்ட்

### புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின்
பசுமையான
தோட்டங்களிலிருந்து
வரும் ஹாவஸ்ட்
தேயிலை...

நறுமணமும்
புத்துணர்வும்
தந்திடும் தேநீரை
நீங்கள் பருக
நுட்பமாகக் கலவை
செய்யப்பட்டுள்ளது.




**100 கிரும் பக்கெட்டுகளில் கிடைக்கும்**

Marketed by
***Burns Philp Lanka (Pvt) Ltd.***
124, Templers Road, Mt. Lavinia.

Stockist in Jaffna
**Jeyarasa & Company**
104. A, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/10046)

# தமிழ் நாடகத் துறையில் வியத்தகு சாதனை புரிந்துள்ள "வேள்வித் தீ!"

சுய விருப்பம் இல்லாமல்— சம்மதம் இல்லாமல்— சிறிதும் எதிர்பாராத சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தத்தால், மிருகவெறி கொண்ட ஓர் ஆணின் தகாத செயலாற் 'பாதிக்கப்பட்ட ஓர் அப்பாவிப் பெண் சம்பந்தமாக, அவளுடைய கணவனின் மனப்பாங்கு என்ன? சமுதாயம் அவளை எவ்வாறு நோக்குகின்றது? அவளுடைய உணர்வலைகள் என்ன? அவள் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமா?

ஏற்கனவே பலரின் கவனிப்பிற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாகி, பல்வேறு காரணங்களாற் சமீபகாலத்தில் கூர்ப்படைந்துள்ள இந்தச் சமுதாய — பண்பாட்டுப் பிரச்சினையைப் பற்றி ஆழமாகவும் அனுதாபத்துடனும் எம்மைச் சிந்திக்கச் செய்கின்றது 'வேள்வித் தீ' என்னும் நாடகம்.

தமிழ் நாடகத்துறையில் வியத்தகு சாதனைகளைப் புரிந்துவரும் குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதி நெறிப்படுத்திய இந்த நாடகம் யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் இரு தடவைகள் மேடையேற்றப்பட்டது.

## கலைச்சுடர்

தன் கணவன் மேல் மட்டற்ற அன்பும் மதிப்பும் நம்பிக்கையும் வைத்துள்ள, உள்ளத்தாற் பொய்யாத குடும்பப் பெண் வாசுகி; மனைவியின் குற்றமற்ற உள்ளத்தைத் தன் அறிவால் ஒப்புக்கொண்டு, ஆனால் உள்ளத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமல், தயங்கித் தடுமாறிச் சராசரி ஆணின் நிலைக்கே இறங்கிவிடும் சீர்திருத்தவாதியும் புத்திஜீவியுமான ஸ்ரீரங்கன்; மனித நேயமும் உயர்ந்த சிந்தனையும் பரந்த உள்ளமுங் கொண்ட பேராசிரியர் பரமநாதன்; தன் காதலி, தன்னைத் தவிர வேறு எந்த ஆணுடனும், சாதாரண முறையிற்கூடப் பழகக் கூடாது என எதிர்பார்க்கும் ரமணன்; உள்ளத்து நேர்மையாலும் உறுதியாலும் அந்த எதிர்பார்ப்பைப் புறக்கணிக்கும் சாகித்யா; சமுதாயத்தின் வக்கிரப் போக்கினால் வாசுகியின் வாழ்க்கை பாழாகிவிடக்கூடாதே என ஏங்கும் நளாயினி — ஆகிய பாத்திரங்களால் "வேள்வித் தீ" சுவாலிக்கின்றது:

இராணுவ வீரர்கள், இராமன், இலக்குமணன், சீதை, கௌதமன், இந்திரன், அகலிகை, ஒதெல்லோ போன்ற பாத்திரங்கள் உறுதுணையாக நிற்கின்றன.

ஆபாசமும் அருவருப்பும் நிறைந்த கற்பழிப்புக் காட்சி தவிர்க்கப்பட்டு, தமிழ் மக்களின் பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்றான வீணையை, இராணுவ வீரன் ஒருவன் பிய்த்தெறிவதாகக் காட்டுவதன் மூலம், அது குறிப்பால் உணர்த்தப்படுகின்றது. கற்பும் ஒழுக்கமும் ஆண்களுக்கும் உண்டு என்பதைப் பேராசிரியர் பாத்திரம் காட்டுகின்றது. அதி தீவிர பெண்ணியவாதிகள் சிலர் சில சமயம் செய்வதைப்போன்று, சமுதாய ஒழுங்கைக் கொட்டிக் குலைத்துக் குழப்பாமல், வாழ்க்கையின் சரிபாதியான பெண்ணின் அவலங்களை, துன்ப துயரங்களைப் பரிவுடனும் அனுதாபத்துடனும் அணுகி அவளை வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் எழும் வகையிற் சம்பவங்கள் கோர்க்கப்பட்டுள்ளன.

கருத்தாழமும் கலைநயமும் மிக்க உரையாடல்; அகலிகை கல்லாகக் கிடக்க வேண்டிய நிர்ப்பந்தம் — சீதை தீக்குளிக்க வேண்டியகொடுமை, — டெஸ்டிமோனா மரணத்தைத் தழுவ வேண்டிய பரிதாபம்— போன்றவை நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாதது என்பதை உணர்த்துமாப்போல் அவை மேடையில் நிகழ்த்தப்படும் பாங்கு; சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக, இன்னிசை வீணையர் (திருப்பள்ளியெழுச்சி), பைங்குவளைக் கார்மலரால் (திருவெம்பாவை), வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு(திருப்பொற்சுண்ணம்) பாரதியாரின் கண்ணன் பாட்டின் சில வரிகள் பாடப்பட்ட முறை. அவற்றின் இசையமைப்பு; வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கேட்ட பின்னணி இசை; பாத்திரங்களின் பண்பை நன்கு வெளிக்காட்டியமருத்துவபீட மாணவர்களின் நடிப்பு ஆகியவற்றின் இணைப்பில் இரண்டு மணி நேரம் இரண்டு நிமிடமாகப் பறந்துவிட்டது; ஆனால் அவை எழுப்பிய சிந்தனைகள், உணர்வலைகள் இன்னமும் நெஞ்சை நிறைக்கின்றன.

**- சிற்பி -**

"பதினேழு ஆண்டுக் கால அவல வாழ்வு எங்களுக்குப் பல இழப்புக்களையும் பின்னடைவுகளையும் தந்திருக்கின்றது; 'குழந்தை' என்ற தலைசிறந்த நாடக ஆசிரியரையும் தந்துள்ளது" என்ற கவிஞர் சோ. பதமநாதனின் கூற்று "உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்பதைக் கவிஞர் முருகையன், கலைப்பேரரசு பொன்னுத்துரை, டாக்டர் நச்சினார்க்கினியன், கலாநிதி நா சுப்பிரமணியன், கலாநிதி என் சண்முகலிங்கன், இ ரதிதரன் ஆகியோருடன் "வேள்வித் தீ"யைப் பார்க்கும் மற்றவர்களும் ஆதரிப்பர் என்பது நிச்சயம். ★

## சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# ஒரு பிடி மண்ணும் மனிதர்களும்

சாந்தனின் இரு கதைத் தொகுப்புகள் அண்மையில் வெளியாகியுள்ளன. ஒன்று சென்னை, 'நர்மதா பதிப்பகம்' வெளியிட்ட "ஒரு பிடி மண்" என்ற தொகுதி. மற்றது "மினிஸ்சு சக மினிஸ்சு" என்ற பெயரில் [அதாவது, மனிதர்களும் மனிதர்களும்] சொழும்பு 'கொடகே பிரசுராலயம்' வெளியிட்ட அவருடைய கதைகளின் சிங்களமொழி பெயர்ப்புத் தொகுதி.

'ஒரு பிடி மண்ணில்' இருபத்தொன்பது கதைகள். 'கணையாழி' யில் தி. ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் திட்டத்தில் தேர்வு பெற்ற, தேடல் மற்றும் 'சமரில் வெளியான 'மனிதர்களும் மனிதர்களும்' ஆகிய இரு குறுநாவல்களும் இதில் உள்ளன. தேடல், தி ஜா நினைவுத் திட்டத்தில் தேர்வு பெறறது என்பது குறிப்பிடப்பட்டது விடுபட்டதுபோல வேறும் ஓரிரு கதைகள் முன்னர் பிரசுரமான விவரங்கள் குறிப்பிடப்படாது போய்விட்டமையைத் தவிர்த்திருக்கலாம்.

'தேடல்', 'ஒருபிடி மண்' ஆகிய இரு கதைகள் தவிர ஏனையவை ஏற்கெனவே ஆசிரியருடைய 'முளைகள்', 'காலங்கள்', 'இன்னொரு வெண்ணிரவு' ஆகிய முந்திய தொகுப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. தமிழ் நாட்டு வாசகர்களுக்காகத் தொகுக்கப்பட்ட நூல் என்பதால் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட 'காலங்கள்', 'இன்னொரு வெண்ணிரவு' தொகுதிகளிலிருந்து கதைகள் சேர்க்கப்பட்டுள்ளது பொருத்தமானதே. என்றாலும் முன்னர் தமிழ்நாட்டிலேயே வெளியான 'முளைகள்' தொகுதியிலிருந்து சில படைப்புகளும் முக்கியமாக அதற்கு பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய அணிந்துரையும் இத தொகுப்பில் சேர்க்கப்படாமல் வேறு புதிய படைப்புகளுக்கும் புதிய முன்னுரை இதில் சேர்க்கப்பட்டிருப்பின் சிறப்பாயிருந்திருக்கும். குறிப்பாக எண்பதுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட அம்முன்னுரை, ஆசிரியரின் தற்போதைய வளர்ச்சிப் போக்குகளைக் காட்டுவதாய் அமையவில்லை.

எனினும் சாந்தனுடைய முக்கியமான படைப்புக்களான, 'அந்நியமான உண்மைகள்', 'ஒருபிடிமண்' 'உலகங்கள்', 'காலங்கள்', 'தேடல்' போன்ற பல படைப்புகள் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப் பார்க்கையில் இதுகாலவரையான ஆசிரியருடைய முக்கியமான தொகுப்புகளிலொன்றாக இது அமையும்.

மிக அழகான முறையில் அச்சிடப்பட்டிருக்கும் இந்நூலில் ஆசிரியர் பற்றிய குறிப்பில் கூறப்பட்டுள்ள ஒரு விஷயம் முக்கியமானது 'தமிழிலக்கிய உலகில் தற்போது அதிகம் கவனம் பெற்றிருக்கும் ஜோதி விநாயகம் நினைவுப் பரிசுத்திட்ட அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவர் சாந்தன்' என்பது ஈழத்து இலக்கியவாதிகளுக்கு அதிகம் தெரிந்திராத விஷயம். யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டே இச்சிறப்பை அவர் பெற்றிருப்பதும் முக்கியமானதாகும்.

## நூல் வரிசை

ஆசிரியருடைய இன்னொரு விசேஷம் பற்றியும் இங்கு கூறுவது பொருத்தம். தற்போது ஆங்கிலத்திலும் எழுதி வரும் சாந்தனின் ஆக்கங்கள் தனிக் கவனம் பெறுகின்றன. பல்வேறு பத்திரிகை, சஞ்சிகைகளில் அவை பிரசுரிக்கப்படுவதுடன், இலங்கையின் ஐம்பது ஆண்டுகால சிறந்த ஆங்கிலப்படைப்புகள் என்ற தேர்வு நூலிலும் அவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.

தமிழ், ஆங்கிலம்மட்டு மல்லாமல், சிங்களம் ருஷ்யமொழிகளிலும் உள்ள அறிவு, சிவில பொறியியல்துறை அனுபவம், தொழில்நுட்பக் கலவி விரிவுரையாளர் தொழில், உலக இலக்கிய அறிமுகம், இவற்றுடன் நீண்டகால அரசியல பிரக்ஞை போன்ற பன்முக ஆளுமைகளின் விளைவாக ஒரு தனித்துவமான சிந்தனையாளராகத் திகழும் சாந்தனின் கலையாற்றலும் பலராலும் போற்றப்படுவது, இவற்றின் விளைவான இலக்கியப் படைப்புகளே இவ்விரு தொகுப்புகளிலும் இடம்பெறுவன,

"மினிஸ்சு சக மினிஸ்சு" என்ற மொழிபெயர்ப்புத் தொகுதியில் சாநதனின் பதினெட்டுக் கதைகள் அடங்கியுள்ளன. யாவற்றையும் மொழிபெயர்த்தவர் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சாமிநாதன் விமல், மலையகத்து இளைஞரான விமல் தற்காலத் தமிழிலக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்கும் பெரும்பான பணியைச் செய்துவருகிறார். குறிப்பாக சாந்தனின் இக்கதைகளை அவர் மொழிபெயர்த்தமை பற்றிக் குறிப்பிடப்படவேண்டும்.

சாந்தன். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தமது புனைகதைகள் மூலம் இலக்கியமாக்கிய முன்னோடி என்பது இன்று வரலாற்று உண்மையாகிவிட்ட ஒன்று இலக்கிய நயமும் அரசியல் தெளிவும் சமூகப்பிரக்ஞையும் மனித நேயமும் கொண்ட அவரது கதைகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை இம்மொழிபெயர்ப்பு தொகுப்பில் அடங்கியுள்ளன. கிருஷ்ணன் தூது. காலங்கள், மண்ணும் முளையும், தமிழன், குயில்வீடு போன்ற பல கதைகள் இதில் உள்ளன. "என்னுடைய இக் கதைகள் தமிழில் வந்ததிலும் பார்க்க, சிங்களத்தில் வருவதே முக்கியமானது" எனச் சாந்தன் தமது முன்னுரையில் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழரது பிரச்சினைகளும் போராட்டத்துக்கான நியாயங்களும், அரசியல்வாதிகளால மட்டும் அல்லது இலக்கியவாதிகளாலும் முன்னெடுக்கப்படுவதும், அவை சிங்களப்பொதுசனத்தினதும் கலை இலக்கியவாதிகளினதும் கவனத்துக்குக் கொண்டு வரப்படுவதுகூடக்

**பொன் பூலோகசிங்கம்**

காலத்தின் தேவை கருதிய ஒன்றேயாகும். இதனை முன்வந்து செய்த மொழிபெயர்ப்பாளரும் வெளியீட்டாளரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்களே இந்நூலும் மிக அழகுற அச்சிடப்பட்டுள்ளது.

நிறைவாக ஒன்றினை வலியுறுத்த விரும்புகின்றேன். சாந்தனுடைய சிறுகதைகள் சர்வதேச தரமுள்ளவை என 'ஒருபிடி மண்' பதிப்பாளர் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், 'சஞ்சீவியில் அவர் தொடர்ந்து எழுதிவந்த உலக இலக்கிய வரிசையில் இடம் பிடிக்கக்கூடிய ஒரு பெரும் படைப்பினையும்கூட, எமது இக்கால கட்டத்து வாழ்வினை வைத்து இலக்கியமாக்கும் கடமையும திறமையும் சாந்தனுக்கு உண்டு. இலட்சியத்தாலும் இலக்கியத்தாலும் செழுமைப்படுத்தப்பட்ட வாழ்வு அனுபவங்களையும் கலையாற்றலையுங்கொண்ட ஒரு படைப்பாளியிடம் அதனை எதிர்பார்க்கும் உரிமையும் எமக்கு உண்டு. ★

## மக்கள் முகம்



யாழ். பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவப் பட்டதாரிகளான டாக்டர் நா. வர்ணகுலேந்திரன். டாக்டர் திருமதி வர்ணகுலேந்திரன் சியாமளா ஆகியோர் இந்தியாவில் சித்தமருத்துவப் பேரறிஞர் பட்டம பெற்றுத் திரும்பியுள்ளனர்.

சித்தமருத்துவத் துறையில் இந்தியாவில் இந்தப் பட்டம் பெற்றுத்திரும்பிய முதலாவது இலங்கை மருத்துவப் பட்டதாரிகள இவர்களாவர்.

யாழ். பலகலைச்கழகத்தில் சித்தமருத்துவத் துறையில் பட்டதாரிகளான இவர்கள் தமிழகத்தில் பாளையங்கோட்டையில் உள்ள டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் 1996 ஆம் ஆண்டு இணைந்து உயர்கல்வி பெற்றுவந்தனர்.

இலங்கையைச் சேர்ந்த மூவருக்கு முதல்தடவையாக இந்தப்பல்கலைக்கழகத்தில் இடம் அளிக்கப்பட்டிருந்தது.

அங்கு கல்வி பயின்று அகில இலங்கை ரீதியில் முதலாவது சித்தமருத்துவ பேரறிஞர் (B S.M S with M D) பட்டத்தைப் பெற்றுள்ள மூவரில் இவர்கள் இருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பல்கலைக்கழகத்தில் இந்தப்பட்டப்படிப்பை இலங்கை மாணவர்கள் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று டாக்டர் வர்ணகுலேந்திரன் எடுதத முயற்சி காரணமாக 5 இலங்கை மாணவர்களுக்கு கடந்த வருடம் முதல் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. (ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஆங்கிலத் துறைத் தலைவராகக் கடமையாற்றி வந்த பீ. கருணாசிறி மேற்படி நிறுவனத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் கடந்த மே மாதம் உயர் தொழில் நுட்பக் கல்விச் சபைப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-9-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. தூதரக நிதி உதவியுடன்
# மேலும் 29 நுண்கருத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 5

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் 29 நுண்கருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் இந்தத் திட்டங்களுக்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட திட்டங்களும் அவை நடைமுறைப்படுத்தப் படவுள்ள இடங்களும் வருமாறு:-

★ குடிதண்ணீர் விநியோகம்— சுழிபுரம் மேற்கு.

★ வள்ளம் மூலம் குடிதண்ணீர் விநியோகம் — எழுவைதீவு.

★ பெண்கள் தலைமைத்துவ பயிற்சி—யாழ்ப்பாணம்.

★ மீனவர் கடனுதவி — பருத்தித்துறை.

★ பெண்கள் தலைமை வகிக்கும் மீனவக் குடும்பங்களுக்கான கடனுதவி—பருத்தித்துறை.

★ இளைஞர் தொழிற் பயிற்சி— ஊர்காவற்றுறை.

★ பொதுக்கிணறு திருத்தம் —கட்டுவன்.

★ செந்தாரகை பயணிகள் படகு திருத்தம்—புங்குடுதீவு, நயினாதீவு.

★ வீதி திருத்தம் — தம்பகாமம், அரசங்கேணி, இத்தாவில்

★ குடிதண்ணீர் விநியோகம்— சங்கானை தெற்கு.

★ பல நோக்கு கட்டடம் அமைப்பு — பெரிய புலோ- சங்கானை, கிளாலி.

★ சனசமூக நிலைய கட்டடம் திருத்தம்— இருபாலை கோப்பாய்.

★ பொது மண்டபம் அமைப்பு—ஆத்திசூடி, கந்தர் மடம்.

★ பெண்கள் தலைமைத்துவப் பயிற்சி— வலிமேற்கு, தெற்கு, வடக்கு.

★ ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தளபாடம் வழங்கல்—புலோப்பளை, அரசங்கேணி, முகாவில், முகமாலை.

★ விவசாயிகள் கடனுதவி—மூளாய், சுழிபுரம்.

★ மீனவர் இளைப்பாறும் மண்டபம்—நாகர்கோயில்.

★ இளைப்பாற்று மண்டபம் — திருத்தகம் முனை, பொலிகண்டி.

★ மீனவர் தொழில் கடனுதவி திட்டம்—குருநகர் தொல்புரம், பொன்னாலை

★ வருமானத்துக்கான தொழில் முயற்சி—மீசாலை

★ பனம் கைத் தொழில் நிலையம் புலோலி தெற்கு,

★ பெண்கள் சுய தொழில் கடனுதவி — புலோலி மத்தி மாதனை, தும்பளை தெற்கு

★ சுயதொழில் கடனுதவி — கொட்டடி.

★ சுயதொழில் உதவித் திட்டம் — தென் மட்டுவில், இராமவில், இடைக்குறிச்சி,

★ பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கான தொழில்பயிற்சி — பளை.

★ இளைஞர்களுக்கான தொழில்பயிற்சி —கோப்பாய்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களையும் சேர்த்து யாழ் மாவட்டத்தில்125 நுண்கருத் திட்டங்கள் ஐ.நா. தூதரகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

இந்த திட்டங்களுக்கு 6 கோடியே 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ.5)


## துஷாந்தீஸ் ஆங்கில கல்வி நிலையம்

23. டச் வீதி — சாவகச்சேரி.

**கல்வி ஆண்டு 2000**

வகுப்புகள் ஆரம்பம்: 08 12 - 99

ஆங்கிலம்: தரம் 3 தொடக்கம் 11 வரை.

ஆங்கில இலக்கியம்: தரம் 9. 10, 11.

பொது ஆங்கிலம்: G. C. E. A/L 2001

ஆசிரியர்கள்: திரு திருமதி M.P. ஷண்
செல்வி R. வைரமுத்து

[சி/10088]


## வாழ்த்துஅட்டைகள்

யாழ். மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் நத்தார் பண்டிகையை முன்னிட்டு அழகிய வர்ண வாழ்த்து அட்டைகள் வெளியிடப்பட்டு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இயக்குநர் அருட்திரு. எமில் போல் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவை வெளியிட்டு வைக்கப்பட்டன. (ஐ 8-4)

# வீட்டுக்குத் தொலைபேசி இணைப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி

நெல்லியடி டிசெ. 5

தொலைபேசி இணைப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 60 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த குடும்பஸ்தர் ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில் 6 மாத கடூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாசி மாதம், வடமராட்சிப்பகுதியிலுள்ள சக்கோட்டை என்ற இடத்தில் ஒரு வீட்டுக்குத் தொலைபேசி இணைப்பை இலகுவாகப் பெற்றுத் தருவதாகக் கூறி 60 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த கொழும்புத்துறையைச் சேர்ந்த துரையப்பா கதிர் ராமநாதன் [வயது 61] என்பவருக்கே பருத்தித்துறைமாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா, 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையை விதித்தார். (ஐ-109)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானம் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையின்பழைய மாணவர் சங்கத்தினரும் லண்டனில் உள்ள பழைய மாணவர்களும் இணைந்தே இதற்கான நிதியை வழங்கியுள்ளனர்

இப்புனரமைப்புவேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்தார். [ஐ-180]


## வணிக மாணவர் மன்றம்
## யா/புனித கென்றியரசர் கல்லூரி
## இளவாலை
## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

மன்ற நிதிக்காக 03—12—1999 அன்று இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட எண்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 1656 |
| 2 ஆம் பரிசு | 0638 |
| 3 ஆம் பரிசு | 0790 |

ஆறுதல் பரிசுகள்:- 0633, 0479, 0804, 2573, 0821.

மேற்படி பரிசுகளைப் பாடசாலை நேரத்தில் பாடசாலையில் 31-01—2000 திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கின்றோம்.

நன்றி!

(71528) தலைவர்.



# லயன் பிரியர்களுக்கு!

## கிறிஸ்மஸ், புத்தாயிரமாம் ஆண்டு வாழ்த்துகளுடன் மனதைக் கிறங்க வைக்கும் செய்தி!

# சிலோன் புறூவரி, லயன் புறூவரி

ஆகிய நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களின்
யாழ். குடாநாட்டுக்கான நேரடி ஏக விநியோகஸ்தர்களாக

# PEARS TRADER

நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனுமதி பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மட்டும் எம்மிடம்

**LION BEER** **LION STOUT**

**CARLSBERG BEER** **STRONG BEER**

போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

# பியர்ஸ் றேடர்

99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்வி மீதும் தாக்குதலா?

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் — கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறாமல் தடங்கல் உண்டாகிவிடுமோ என்ற அச்சம் நேற்று வரை நிலவியது. அந்தத் தடங்கல் நீக்கப்படவில்லையெனில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்களின் கல்வி மீது நடத்தப்படும் பெருந் தாக்குதலாக, தருவிக்கப்படும் பேரிடியாக ஆகிவிடும்.

கல்விப் பொதுத் தராதர [ஜி. சி. ஈ] சாதாரணதரப் பரீட்சை, மாணவர்களின் இடை நிலைக் கல்வியில் முக்கியமான ஒன்று. ஜி. சி. ஈ சாதாரண தர வகுப்பே இடை நிலைக் கல்வியின் தகுதி காண் கல்வி நிலையாகக் கொள்ளப்படுகிறது. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையே தொழில் வாய்ப்புக்கான ஆகக்குறைந்த அடிப்படைத் தகுதியாகவும், உயர் கல்வியைத் தொடர்வதற்கான தகுதிகாண் பட்டமாகவும் விளங்குகிறது. மொத்தத்தில் மாணவர்களின் கல்வி நிலைகளில் அதுவே முக்கிய சந்தியாக விளங்குகிறது எனலாம்.

வன்னிப் பிரதேசத்திலிருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கென விண்ணப்பித்த ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குப் பரீட்சை நடத்தப்படாவிடின், அது அவர்களுக்குச் செய்யப்படும் பெரும் துரோகமாக அமையும். அவர்களின் கல்வி உரிமையைப் பறித்ததாகும்.

இப்பரீட்சை தடங்கலுற்றால், பெரும் பசிற்றங்களுக்கும் அவலங்களுக்கும் மத்தியில் பரீட்சைக்குத் தயார்செய்த மாணவர்களின் மன நிலை பெரிதும் பாதிப்புறும். அதன் விளைவாக பரீட்சார்த்தி ஒவ்வொருவரினதும் கல்வி வளர்ச்சிக்குந்தகம் உண்டாகும். இது மிகவும் பாரதூரமான விடயம்.

இந்த வகுப்பில் சுற்றல் குழம்பி விட்டால் ஓர் இளைஞனது வாழ்க்கையே வேறு திசைமாக மாறிவிடும். மாணவன் ஒருவன் தனக்குள் கொண்டிருந்த தனது கல்வி தொடர்பான எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சாத்தியம் அருகிவிடும். உயர்கல்வி பயிலக்கூடிய திறமை உள்ள மாணவன்கூட சாதாரணதரப் பரீட்சைக்கு உரிய காலத்தில்தோற்றமுடியவில்லை என்ற காரணத்தினால் கல்வியை — கற்றலை — நிறுத்த உந்தப்படும் அபாயம் உண்டு!

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடத்திக் கொண்டு, வன்னிப் பிரதேசத்தில் மட்டும் வைக்காதிருப்பின் அந்தப்பகுதி மாணவர்களின் எதிர்காலத்தைத் தெரிந்து கொண்டே நாசமாக்குவதாகும்.

பரீட்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே ''ஓயாத அலைகள் -3'' தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. எனவே வினாத்தாள்களை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்துக் கடைசி நாள் வரை காத்திருக்காமல் ஆரம்பத்திலேயே சிந்தித்து, திட்டமிட்டுச் செயற்பட்டிருக்க வேண்டும்.

இதுவிடயத்தில் இரண்டு தரப்புகளும் ஒத்துழைத்து, ஏதோ ஒருவகை இணக்கம் கண்டு வினாத்தாள்களை வன்னிக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமாகும். பரீட்சைக்குத் தடங்கல் என்று வந்தால், அது மாணவர்களின் கல்வியோடும், அவர்களின் எதிர்கால வாழ்க்கையோடும் விளையாடுவதாகும். இதனை மனதிற்கொண்டு தடங்கலை நீக்க சம்பந்தப்பட்ட தரப்புகள்மனமொன்றிச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

# கூட்டுறவுத் துறையின் ஆணிவேராக ஆழத் தடம்பதித்த அமரர் வீரசிங்கம்

கூட்டுறவின் தந்தை அமரர் வீரசிங்கத்தின் 35ஆவது வருட நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

வடபகுதியில் கூட்டுறவுத் துறைக்கு அரும் பணியாற்றி கூட்டுறவுத்துறையை வளர்த்தவர் — கூட்டுறவுத் தந்தை என்று கூட்டுறவாளர்களால் அன்பாக அழைக்கப்படுபவர் — கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் ஆவார்.

அவரைக் கூட்டுறவு உலகின் குரு என்று கூட்டுறவாளர்களும்கல்வி உலகின்குரு என்று கலவிமான்களும் துதிக்கின்றனர்.

அவரிடம் இருந்த தலைமைப் பண்புகள் ஏராளம். கூட்டுறவுத் தலைமைத்துவர்துக்கு வேண்டிய சிறப்பான பண்புகளை தனது சேவையில் அணிகலனாகக் கொண்டவர். அவர் வடபகுதி மக்களின் அன்பை மாத்திரம் பெறவில்லை கிழக்கு மாகாணக் கூட்டுறவாளர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர்.

ஒரு கூட்டுறவு நிறுவனம் பாதிக்கப்படும் பொழுது ஏனைய கூட்டுறவு நிறுவனங்கள் எவ்வாறு உதவலாம் என்பதை செயற்படுத்திக் காட்டியவர். வடபகுதியில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை நிறுவியதோடு கூட்டுறவுச் சங்கங்கள் ஆழ வேரூன்றவும் ஆணிவேராகத் திகழ்ந்தவர். கூட்டுறவை மக்களிடையே பரப்பி அதன் கொள்கைகளை சிறப்பாக வழிநடத்திய பெரியார். கூட்டுறவு அமைப்புக்களினூடாக ஏராளமான சொத்துக்களைச் சேர்ப்பதற்கு வழி காட்டியதுடன் கூட்டுறவுக் கொள்கையில் ஒன்றான கூட்டுறவுக் கல்வியை மேம்படுத்தும் முகமாக யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தார்.

கடந்த 1937 ஆம் ஆண்டு வடபகுதியில் ஐக்கிய மேற்பார்வைச் சபை உருவாக்கப்பட்டது அந்தச் சபையை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர் அமரர் வீரசிங்கம் அவர்களே. சுமார் 26 வருடங்கள் அந்தச் சபையின் தலைவராகவும் திறம்படச் சேவையாற்றி கூட்டுறவாளர்களின் மதிப்பைப் பெற்றவர்.

### நாடாளுமன்றத்தில்

அமரர் வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவுடன் மட்டும் நிற்கவில்லை; நாடாளுமன்றம் வரை சென்று மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1947 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தனித்து நின்று சுயேச்சையாகப் போட்டியிட்டார். ஆயினும் அத்தேர்தலில் அவர் தோல்வியடைந்தார்.

பின்னர் 1952ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மனம் தளராது மீண்டும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். வட்டுக்கோட்டைத் தொகுதி உறுப்பினராக அமரர் வீரசிங்கம் நாடாளுமன்றம் சென்றும் அங்கு சும்மா இருக்கவில்லை கூட்டுறவுக் கொள்கையை வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்.

கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள், குறைபாடுகள், அபிவிருத்தி என்பவற்றை ஆராய நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவராகவும் அவர் செயற்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவர் சங்கானையில் கிராமிய வைத்தியசாலை ஒன்றையும் கட்டியெழுப்பினார்.

கடந்த 1922 ஆம் ஆண்டு தொடக்கம் 1952 ஆம் ஆண்டு வரை சுமார் 30 வருடங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பதவி வகித்தவர் அமரர் வீரசிங்கம். கல்விச் சேவையில் மட்டும் அன்றி எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டுறவுத் துறையிலேயே தனது முத்திரையை ஆழப் பதித்துக் கொண்டவர் அவர். அவரது அயராத முயற்சியினால் தான் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத் துறை பெருவெற்றி கண்டது.

யாழ்ப்பாணத்தின் தொழில் நுட்பக் கல்வியின் அவசியம் பற்றி அன்றே குரல் கொடுத்தவர் பெரியார் வீரசிங்கம். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்கள் தொழில் நுட்பத்தைக் கற்பதற்கு யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக்கல்லூரிஒன்று அமைவதன் அவசியத்தை வலியுறுத்தியவர் அவர்.

பிரித்தானிய அரசாங்கம் வீரசிங்கம் அவர்களின் சமூக சேவைக்கும் கூட்டுறவுச் சேவைக்கும் மதிப்பளித்து பிரித்தானிய சாம்ராஜ்ஜிய அங்கத்தவர் என்ற பட்டத்தையும் சமாதான நீதிவான் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது

### பா. நந்தகுமார்

1950 ஆம் ஆண்டில் 'கூட்டுறவுத் துறையின் தத்துவங்களும் செயற்பாடுகளும்' என்ற தலைப்பிலான முதலாவது ஆங்கில நூலை அவர் எழுதிவெளியிட்டு வைத்தார்.

அத்துடன் கூட்டுறவு வெளியீடான 'ஐக்கிய தீபம்' என்ற பத்திரிகையை வெளியிடுவதற்கும் அயராது உழைத்தார்.

இன்று அவரது நினைவைப் போற்றுவதன் மூலம் கூட்டுறவுத் துறையை வளர்க்க உறுதி பூணுவோம். ★

### இணைப்பு வேலைகள் முடிந்தும்

# கோப்பாய்ப் பகுதிக்கு மின் வழங்கப்படவில்லை

கோப்பாய், டிசெ. 5

கோப்பாய்ப் பகுதியில் பல வருடங்களுக்கு முன் மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை. யாழ் மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டும்யாழ்நகருக்குஅண்மையில் உள்ள கோப்பாய்ப் பகுதிக்கு இதுவரை பகுதி நேர மின்சாரம் கூட வழங்கப்படவில்லை என்று அப்பகுதி பொது அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

அரசினர் வைத்தியசாலை பிரதேச செயலகம் மற்றும் முக்கிய அரச அலுவலகங்கள் இப்பகுதியில் அமைந்திருந்தும் மின்சாரம் கிடைக்காமையால் அவை சீராக இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் பல வார்ட்டுகள் காணப்பட்ட போதிலும் மின்சாரம் இன்மையால் நோயாளிகள் அங்கு தங்கமுடியாதுள்ளது.

கோப்பாயைச் சுற்றி உள்ள பிரதேசங்களான இருபாலை, உரும்பிராய், அச்செழு போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதும் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டது (ஐ 72)

## மயானம் புனரமைப்பு

வடமராட்சி, டிசெ. 5

புலோலி ஆனைவிழுந்தான் மயானம் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இம்மயானம் துப்புரவு செய்யப்பட்டுச் சேதமடைந்த பொதுமக்கள் தங்கும் மடம், மதில் என்பனவற்றைப் புனரமைப்புச் செய்ய பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

(ஐ-175)

## விவசாயிகள் மண்டபம்

வடமராட்சி, டிசெ 5

கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் 'கோவிசெத்' என்னும் விவசாயிகள் மண்டபம் ஆறு லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தினால் கட்டி முடிக்கப்பட்ட இக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஐ-173)

## நாளை

கார்த்திகை 20

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தசி

பின் இரவு 2 23 வரை.

நட்சத்திரம்: விசாகம்

பிற்பகல் 4 40 வரை.

சுபநேரம்: 12 17 — 1 47

ராகுகாலம்: 7.47 9 17

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயனுக்கு

சோர்வுடன் பேசுவது நினைத்த பயனைக் கெடுக்கும்.

ஔவையார்

# எதிரொலி...

- இடியன் -

● காலம் கடந்த மருந்துகளின் விற்பனை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது.

★ இங்கே வாழ்பவர்களைக் 'கடுகதி'யிலே காலம் 'செல்ல' வைக்கும் முயற்சியோ என்னவோ!

● விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படல் வேண்டும் எனப் பலர் வலியுறுத்தி வருகின்றபோதிலும் உத்தியோக ரீதியாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை!

★ ஆட்சி மாறினால், அல்லது ஆச்சி (மனம்) மாறினால் ஏதாவது நடைபெறலாம்!

● விரைவில் அரசியலுக்கு முழுக்குப்போடத் தீர்மானித்துள்ள இராமகிருஷ்ண ஹெக்டே, அரசியல் வாதிகளுக்கும் ஓய்வு தேவை என்கின்றார்!

★ உண்மைதான் ஆனால் ''கட்டாய ஓய்வி''ல் அனுப்பப்பட்டாலும் மீண்டும் வரத் துடிதுடித்துக் கொண்டு பலர் இருக்கின்றார்களே!

● போபர்ஸ் ஊழல் குற்றச் சாட்டுப் பட்டியலிலிருந்து ராஜீவ் காந்தியின் பெயரை நீக்கக் கோரி ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்துவதற்குக் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாம்!

★ நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய ஓர் அகில இந்தியக் கட்சி 'நீதி'யை 'வீதி'களிலே தீர்மானிக்க முயலலாமா?

● ஆசிரியைகளும் பாடசாலைக்குச் சீருடை அணியத் தொடங்கியுள்ளார்கள்!

★ சீருடை, சீர்நடை, சீர்பணி, சீர் அணி என விரிந்து சென்றால் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும் என அங்கலாய்க்கிறார்கள் சில பெற்றோர்!

● கசிப்பு, நீலப்படம், திருட்டு, ஒழுக்கக்கேடு போன்றவை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதைக் கண்டு பலர் கவலையடைகின்றனர்!

★ அப்பன் இல்லாவிட்டால் அப்பன் அருமை தெரியும்; உப்பு இல்லாவிட்டால் உப்பின் அருமை தெரியும்; ''பொடி'' இல்லாவிட்டால் ''பொடி''யின் அருமை தெரியும் என்கிறார்பழுத்த அனுபவசாலி ஒருவர்!

● வெள்ளை வானில் வந்த குண்டர்கள் சிலர், ஐ.தே.க தலைமை அலுவலகத்தைத் தாக்கினார்களாம்!

★ அமைதியின் சின்னம் வெள்ளைப் புறா: அராஜகம், அடி தடி போன்றவற்றின் சின்னம் வெள்ளை வான்!

● சில பிரசாரக் கூட்டங்களுக்கு நேரில் சமுகமளிக்க முடியாதபடியால், செய்மதி மூலம் மக்களுக்கு உரையாற்றுகிறாராம் ஜனாதிபதி!

★ மக்களிடமிருந்து - வாக்காளரிடமிருந்து அவர் தொலை தூரத்தில் நிற்பதை இது காட்டுகின்றது என எதிரணிகளைச்சேர்ந்தவர்கள் சொல்லக்கூடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடப் பொருள்கள், தையல் மெசின், நீர் இறைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. ஜெகராஜ், 2ஆம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய்.
(71514)

எட்டு மாதங்கள் நிரம்பிய ஒறிஜினல் பொமனேரியன் கறுபபு நிற பெண் நாயும் நாய்க்கூடு, கோழிக்கூடு என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜசிங்கம், இல. 9, பிளைச்சர் ஒழுங்கை, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) யாழ்ப்பாணம்.
(71523)

ரெலிபோன் பெட்டி (Call Box Panasonic Fax KX F 780BX விற்பனைக்குண்டு 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தொலைபேசி: 2537
[71527)

4½ மாதம் நிரம்பிய கைலைன் பிறவுண்கோழிகள், முட்டையிடும் ஊர்க்கோழிகள், கினிக்கோழிகள், வான் கோழிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய்.
(71444)

## தவறிவிட்டது

கோப்பாய் தெற்கு பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த இராசரட்ணம் சுசியந்தி என்பவரது தே. அ. அ. இல. [757022494V], விசேட அ. அ. இல. [0903008152] ஆகிய இரண்டும் பேசுடன் 06-11-99 அன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். அல்லது நேரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[71537]

ஒன்றரைப்பவுண் நிறையுடையகைச்சங்கிலி 3-12-99 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் கஸ்தூரியார் ஒழுங்கைக்கும் இடையில் அச்சுவேலிக்குச் செல்லும் மினி பஸ்ஸில் ஏறும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல:- 17 கஸ்தூரியார் வீதி [யாழ்ப்பாணத்திலுள்ள] திருமதி வி. கிருபாதேவியிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[71534]

27 - 11 - 99 அன்று 257/2 ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் முன்னால் இரண்டு தனியார் பேரேடுகள் ''அச்செழு அம்பாள்'' என்று பெயரிடப்பட்ட கணக்குப் புத்தகங்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மன்றத்தினரிடம் ஒப்படைத்து உதவவும் (71524)

கந்தசாமி கலைமதி என்பவரது தேசிய அ. அட்டை (736182297 V), விசேட அ. அட்டை (0905021295), பல்கலைக்கழக அ. அட்டை என்பன 01-12-99இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(71539)

## சித்திவிநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண் முறையில் பெயர் அமைக்க கிரகதோச யந்திரங்களுக்கு கொழும்பில் 22 வருட சோதிட அனுபவம் பெற்ற விஸ்வப் பிரம்ம ஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சு வீதி, சாவகச்சேரி.
[71389]

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[71373]

புறோயிலர், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குஉண்டு. கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.
[71505]

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[71521]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல. 19, முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையடி. நல்லூர்.
[71512]

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தரட்டாதி 7 இல் செவ்வாய் 56 பாவமுள்ள 29 வயதுடைய படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. என்ஜினியர், எக்கவுண்டன் விரும்பத்தக்கது (வெளிநாடு அல்லது உள்நாடு) தொடர்பு: முருகன் திருமணசேவை செ. விஜயரட்ணம், நவாலி கிழக்கு, மானிப்பாய். T. P. No. 070-212324. எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்கள் உண்டு.
(71493)

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை, யாழ். வீதியில் மாலு சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. குடியிருக்கவோ அல்லது ரெயிலர் கடை, கொமினிக்கேசன் போன்ற தேவைகளுக்கு உகந்தது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 975, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [71350]

## வீடு விற்பனைக்கு

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் வீடும் [05 அறைகள் Terrazzo தளமிடப்பட்டது] நீர்த்தாங்கியுடன் கூடியதுமான 16 பரப்புக் காணியும் வீடும் முழுமையாக அல்லது வீடும் 6 பரப்புக்காணி பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- ஸ்ரீகதிர்காமநாதன், ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை.
[71378]

## காணவில்லை

மானிப்பாய் சோதிவேம்படி வீதியைச் சேர்ந்த க.மகாலிங்கம் ஆகிய எனது வளர்ப்பு அல்சேஷன் நாய் (பெண், மாவெள்ளை நிறம்) கடந்த ஞாயிறு முதல் காணவில்லை. தெரிந்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் விலாசத்தில் தெரியப்படுத்தவும். சன்மானம் வழங்கப்படும். (71487)

## வீடு வளவு விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் வீடு வளவு, கிணறு பயிர்களுடன் கூடிய 10¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அரிசி ஆலையாக அல்லது வேறு தொழிற்சாலை அமைக்க வாய்ப்பான இடமும் ஆதனமும். தொடர்பு: த. வேலாயுதம் சட்டத்தரணி ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி.
(சி/ 10089)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### சின்னம்மா இராசையா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| (அளவெட்டி) | (அன்னுங்கை) |
| 27--07--1924 | 16--12--1998 |

திதி: 05-12-1999 (திரயோதசி)

உங்கள் அன்பு நினைவுகளை ஒவ்வொன்றாய் நினைக்கின்றோம் அம்மா! எம்மையெல்லாம் விட்டகன்று ஓராண்டு ஆனாலும் எம் நெஞ்சம் துடிக்குதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு
அன்னுங்கை,
(71536)

## அரிய சந்தர்ப்பம்

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்களையும் சிறந்த புத்தகங்கள், நாவல்கள், வீடியோ திரைப்படங்களையும் இலவசமாகவே பெற்றுப் பயனடையலாம்!

வேலைவாய்ப்புக்களும் உண்டு!

விவரங்களுக்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய நீளமான தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 979
மே / பா உதயன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (71491)

## கூட்டுறவுப் பெரியார்
## அமரர் வீரசிங்கம்

அவர்களின்

## 35 ஆவது நினைவுதினம்

இடம்:- வீரசிங்க மண்டப முன்றல்
காலம்:- இன்று 05 - 12 - 1999
ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

தலைமை:- திரு. பெ. கனகசபாபதி அவர்கள்
(தலைவர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை)

முதன்மை விருந்தினர்:-
திரு. எஸ். கே. சண்முகநாதன் அவர்கள்
(கூ. அ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:-
திருமதி கோ. திருநாவுக்கரசு
(கூ.அ.உ. ஆணையாளர், கணக்காய்வு, யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்:-
திரு. இ. க. குமாரசாமி அவர்கள்
(முதுபெரும் கூட்டுறவாளர்)

நினைவுப் பேருரை:-
பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அவர்கள்
(புவியியல்துறை தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

விழா சிறப்புற அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
[சி/10083]

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்
செல்வி சி. சிவமேகலை
அவர்களின் அன்புத் தாயார்

### சிவசுப்பிரமணியம் செல்வராணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
சகல உத்தியோகத்தர்களும்.

பிரதேச செயலகம்,
வலி. வடக்கு, தெல்லிப்பழை. (71532)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### செல்லத்துரை இராசரட்ணம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04-04-1945 | 16-12-1998 |

திதி: 05 - 12 - 1999

குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

அரசர்கேணி,
பளை. (சி/10086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதிவான் ப.செல்லத்துரை அவர்களின் பாராட்டு விழா சிறப்பு மலர்

கைதடி 05 - 12 - 1999

## அருட்திரு இராஜநாயகம் ஆசி!

திரு. ப. செல்லத்துரைஅவர்கள் சமுதாயத்துக்கு எப்போதும் நல்லவைகள் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்ததை நான் ஆரம்ப முதல அறிவேன். இன்று இவர் ஒரு சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதை அறிந்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இவரை என் முழு இதயத்தோடு பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன்.

அருட்திரு. செ. யே. இராஜநாயகம்
இயக்குநர்
-அகவொளி-

## பொதுப்பணி உயரட்டும்

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் திரு. ப. செல்லத்துரை அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். கைதடி வாழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்றிப் பொது நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அவர் அயராது உழைத்து வருகிறார். கைதடிப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களில் அவர் அங்கத்தவராக விளங்குவது மகிழ்ச்சி தருவதாகும். அன்னாரது பொதுப் பணி மேலும் வலுவடைய சமாதான நீதிவான் பதவி உதவுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

''சமன் செய்து சீர் தூக்குங் கோல் [illegible] போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி'' என இயம்பினார் உலக பொது மறை தந்த வள்ளுவர். அதற்கமைய ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமையுடன் தனது பணியைச் செய்து சிறக்க வாழ்த்துகிறேன்.

வ. செல்வராசா,
கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

## எங்கள் முற்றத்து மல்லிகை

எங்கள் கிராமத்தின் குரலாக இருந்து செயற்பட்டுவரும் ப. செல்லத்துரை அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் கிடைத்துள்ளதையிட்டு எங்கள் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் முற்றத்து மல்லிகையே மேலும் பல்லாண்டு சேவை புரிய வாழ்த்துகின்றோம்.

வ சின்னத்தம்பி
தலைவர்.
நேவவத்தை குடியேற்றத்திட்ட அபிவிருத்திக்கழகம்.

## மக்கள் தலைவன்

மாணவப் பராயத்திலிருந்தே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டு செயற்பட்டு வந்த ப. செல்லத்துரை அவர்கள் இன்று பெரும் மக்கள் தலைவராக உயர்ந்துள்ளார்.

அவருக்கு எல்லாம்வல்ல கைதடிமேற்கு ஞானவைரவர் என்றும் துணையிருப்பாராக!

வே. கந்தசாமி
செயலாளர்.
ஞானவைரவர் ஆலய பரிபாலன் சபை
கைதடி.

சகானா
பாடசாலை உபகரணங்களும்
ஆயுள்வேத மருந்துகளும்
சாவகச்சேரி.



## திரு. ப. செல்லத்துரை ஜே. பி.

அதிபர் கலைவாணி வித்தியாலயம்

போஷகர்: சரஸ்வதி ச. ச நிலையம், - கைதடி
சரஸ்வதி கி. அ. சங்கம், - கைதடி
நேவவத்தை குடியேற்ற திட்ட அபிவிருத்திக் கழகம்

தலைவர்: தென்மராட்சி ச.ச. நிலையங்களின் சமாசம்

உபதலைவர்: யாழ். மாவட்ட ச. ச. நிலையங்களின் சம்மேளனம்

முன்னாள் தலைவர்:
கைதடி ச. ச. நிலையங்களின் சமாசம்
கிராம ராஜ்ஜியம் கைதடி
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்

முன்னாள் பொது முகாமையாளர்:
சாவகச்சேரி ப. தெ. வ, அ. கூ. சங்கம்
சுன்னாம் ப. தெ. வ. அ, கூ. சங்கம்

முன்னாள் ஆசிரியர்: உயிலங்குளம் ம. வி. - மன்னார்
நாவற்குழி ம. வி.

முன்னாள் பயிற்சி ஆசிரியர்:
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

ஆலோசகர்: கலை இலக்கிய நண்பர்கள்|வட்டம்- கைதடி
இளைஞர் அபிவிருத்திக் கழகம்

உறுப்பினர்: லயன்ஸ் கழகம் சாவகச்சேரி
தென் மேற்கு ப.நோ.கூ. சங்கம் - கைதடி

விழா நிகழ்ச்சி

தலைமை: சி. வே. சின்னத்தம்பி
இடம்: சரஸ்வதி கலையரங்கு - கைதடி மேற்கு
காலம்: 05 - 12 - 1999 ஞாயிறு காலை 9 மணி

## பிரம்மஸ்ரீ விரமணி ஐயர் ஆசி

செந்தமிழும் சைவமதம் சீலம் ஓங்கும்
செழும்பதியாம் கைதடியூர் தனிலே மேவும்
கந்தனவன் இணுங்கித் தோட்டத்தலம் மலர்ந்தே
கவினருளைப் பொழிகின்ற கழல்கள் போற்றும்
அந்தமிலா முருகபக்தன் ஆசி ரியன்
அழகுகலை வாணிவித்யா லயஅ திபர்
சுந்தரஞ்சேர் சமாதான நீதி வானாய்
சோபிதப் பட்டம் பெற்றான் நீடு வாழி.

## புகழ்பரப்பி நெடிது வாழ்க

பொதுநல நோக்கும் சமநீதிப்பற்றும் வாய்ந்து பணியாற்றும் கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர்

திரு. ப. செல்லத்துரை அவர்கள்

சமாதான நீதிவான் ஆகியமை குறித்து மனமார்ந்த மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

" நல்லொளிப் புகழ் பரப்பி நான் பல நெடிது வாழ்க "

நீர்வேலி தெற்கு. இ. முருகையன்

## பிரதேச செயலர் வாழ்த்து

கைதடி கிராமத்தின் வளர்ச்சியிலும் அங்கு வாழும் மக்களின் முன்னேற்றத்தில் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் செயற்பட்டு வருபவர்களில் கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப. செல்லத்துரை அவர்களும் ஒருவராவார்.

இத்தகைய ஒரு சமூகப் பணியாளரின் சேவைகளைப் பாராட்டியும், அவருக்கு சமாதான நீதிவான் பட்டம் கிடைத்ததையும் கௌரவித்தும் கைதடி மக்கள் நடத்துகின்ற பாராட்டு விழா போற்றுதற்குரியது.

பு: சுந்தரம்பிள்ளை,
பிரதேச செயலர், தென்மராட்சி.

## தன்னலமற்ற சேவையாளன்

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபராக கடமையாற்றிவரும் ப. செல்லத்துரை தனது வேலைப் பளுக்களுக்கிடையிலும் சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்து வருகிறார்.

கைதடி கிராமத்திலேற்பட்ட பல பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்து வைத்த செல்லத்துரை அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டமை அறிந்து எனதுபாராட்டுதலையும் வாழ்த்துகளையும் அவருக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ரி. வி. கிருஸ்ணசாமி,
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.

## கூட்டுறவுத்துறைக்கு பெருமை

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ சங்கத்தில் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு கூட்டுறவுக் கொள்கையைக் கட்டிக் காத்த ப. செல்லத்துரை அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் கிடைத்தமையையிட்டு கூட்டுறவுத்துறையே பெருமையடைகிறது.

எஸ். கே. சண்முகநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

## பிரச்சினை தீர்ப்பதில் வல்லவர்

எங்கள் கிராமத்து மக்களிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைப்பதிலும், குடும்பப்பிரச்சினை, எல்லைப் பிரச்சினை என ஏற்படுகின்ற எந்தப்பிரச்சினையையும் தீர்த்து வைப்பதிலும் எங்கள் நிலையப் பணிகளுக்கும் உதவும் தன்னலமற்ற சேவையாளன் அதிபர் ப. செல்லத்துரையை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

சரஸ்வதி சனசமூக நிலையம்
கைதடி மேற்கு.
கைதடி தெற்கு சனசமூக நிலையம்
கைதடி.
நவ சனசமூக நிலையம்
நவபுரம், கைதடி.
வளர்மதி சனசமூக நிலையம்
கைதடி மத்தி.

இந்திரன் நகையகம் - சாவகச்சேரி
அம்பாள் பார்மஸி அன்குறோசறி
சாவகச்சேரி.
கல்யாணி பாதணியகம் சாவகச்சேரி.
விமலாஸ் தொலைத் தொடர்பு
சாவகச்சேரி.

செல்வம் கூல்பார்
4, நவீன சந்தை, சாவகச்சேரி.

அம்பிகாபதி பான்ஸி ஹவுஸ்
சந்தை உட்புறம் சாவகச்சேரி.

துஷா ஒப்ரிஷன்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நியூ செலக்சன் றெடிமெட்ஸ்
நவீன சந்தை, சாவகச்சேரி.

ஆனந்த பவான்
ஒக்களை விநாயகர் ஆலயம் அருகில்
கண்டி வீதி, கைதடி,

கலைவாணி இனிப்பகம்
சந்தை உட்புறம் சாவகச்சேரி.

பாபு றெக்கோடிங் ஸ்பொட்
சாவகச்சேரி.

எரிக்கணேஷ் கண்ணாடியகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ராஜ்லேஸ் புடைவை மாளிகை
நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.

பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்
சாவகச்சேரி.

ஏ. ரி. குமார்
சந்தை உட்புறம் சாவகச்சேரி.

சிறீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்
148, கண்டி வீதி, சாவகச்சேரி.

குறிஞ்சி ஜுவுளி சமுத்திரம்
சாவகச்சேரி.

மோகனச்சந்திரன் வெற்றிலைக்கடை
சாவகச்சேரி

ஆனந்தா றேடிங்கோ
பலசரக்கு வாணிபம்
சாவகச்சேரி (சி/10078)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு நத்தார், புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளத் தேவையான பலவிதமான ✠ நத்தார் ✠ புதுவருட வாழ்த்து மடல்களை

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகட்கு விசேட கழிவு உண்டு.

**ஓல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

132, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு கொள்ள தொலைபேசி எண்:- 2666

(71490)



## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம்
கைதடி

## கேள்வி கோரல்

### வெற்றுச் சாக்கு, உரப்பை விற்பனை

எமது சங்கத்தில் மாவு சாக்கு 1,200, அரிசி சாக்கு 4,000, உரப்பை 20,000 விற்பனைக்கு உண்டு. மீளளிப்பு வைப்புப் பணமாக 1000 ரூபா செலுத்தி சங்கத்தினால் வழங்கப்படும் படிவத்தில் தங்கள் கூறு விலையைக் குறிப்பிட்டு 14-12-99 மாலை 3 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

தொலைபேசி இல. 212388
பக்ஸ் இலக்கம். 094 – 70 – 212388


தலைவர்

தென்மராட்சி மேற்கு,
ப. நோ. கூ. சங்கம்,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய் வீதி,
கைதடி.

(சி/10079)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

வையக மிதப்பில்
28 – 08 – 1981



வானவன் அடியில்
05 – 11 – 1999

செல்வன்

### தேவராசா கிருபாகரன்

கண்ணுக் கினிய விருந்தாக
களிப்புடன் எம்முன் வலம்வந்தாய்
மண்ணில் உன்னை நாமிழந்து
மறைந்தது திங்கள் எனக்கண்டு
எண்ணம் தன்னில் உனதுமுகம்
என்றும் எழுந்தே வாட்டிடினும்
கண்ணுதல் ஈசன் துர்க்கையவள்
கழலடி சேர்ந்தே உய்ந்திடுவீர்!

மேற்படி எமது அன்புச் செல்வன் தேவராசா கிருபாகரன் அவர்கள் இயற்கை எய்தி திங்கள் ஒன்று நிறைவுற்ற இந்நாளில் அன்னாரின் நினைவாக இன்று (05-12-99) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தாய், தந்தை
மாமன்மார்:- மனோ, ராசன்.
மாமிமார்:- தர்சிகா, வினோதினி.

துர்க்காபுரம்.
தெல்லிப்பழை.

(71477)

## திருட்டு முயற்சி

திருநெல்வேலி, டிசெ. 5

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் குமாரசுவாமி வீதிப்பகுதியில் உள்ள ஒரு வீட்டின் கூரைப்பகுதியைப் பிரித்து திருடர்கள் உள்ளே இறங்கியபோது வீட்டில் உள்ளோர் விழித்துக் கொண்டதனால் திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ. 5

மானிப்பாய் வட்டலயன்ஸ் கழகம் சுன்னாகம், உரும்பிராய் லயன்ஸ் கழகங்களுடன் இணைந்து இணுவில் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் கடந்த நவம்பர் மாதம் வசதி குறைந்தவர்களுக்காக நடத்திய கண்பரிசோதனை முகாமில் 154 பேர் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டனர்.

இந்தப் பரிசோதனை முகாமின் போது 18 பேர் விழி வெண்படலம் அகற்றும் சத்திர சிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு தேவைப்படும் கண்ணாடி வில்லைகளை கொழும்பு கிரான்பாஸ் லயன்ஸ் கழகம் அன்பளிப்புச் செய்துள்ளது என்று இணைப்பாளர் லயன் எஸ். எஸ். தங்கராசா தெரிவித்துள்ளார்.

கண் பரிசோதனையை யாழ் போதனா வைத்திய சாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியக் கலாநிதி எஸ். குகதாசன் மேற்கொண்டார்.

(ஐ-க)

## மகர ஜோதி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 5

சுவிற்சர்லாந்து ஐயப்ப பக்தர்களின் ஏற்பாட்டில் சூரிச் நகரில் உள்ள சிவன்கோயிலில் சர்வதேச இந்துமதகுருபீட ஸ்தாபகர் அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் சபரி மலை ஸ்ரீஐயப்பசுவாமிக்கு மகர ஜோதி விழா நடைபெறவுள்ளது.

இம்மாதம் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான மூன்று நாள்கள் இவ் விழா நடைபெறும்.

இந்த நாள்களில் மஹா கணபதி ஹோமம், ஐயப்பன் பஜனை, பதினெட்டாம்படி விசேட பூசை ஆன்மீக உரை என்பன இடம்பெறவுள்ளன.

[ஐ-க]


## 2000 ஆம் ஆண்டு

புதிய வகுப்புகள்
தரம் 4 முதல் O/L வரை
ஆரம்பம்: 05-12 99

சிறந்த பெறுபேறுகளுக்கு
விப்ஜியோர் கல்வி நிலையம்
**VIBGYOR**

இல. 10/2, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

★ புலமைப்பரிசில் வகுப்புகள் சிறுகுழுக்களாக நடைபெறுகின்றன.

[71501]


## பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் E. K. சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)

அன்பினால் எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்ட பண்பின் சிகரமே!
சேவையாற்ற எனவே இம் மண்ணில் வந்துதித்த எம் குலவிளக்கே!
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றின் உறைவிடமே!
ஈரேழு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உமது புகழ் மங்காது!

உமது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

'நியூ தாரங்கி',
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(71497)

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 1930 – 05 – 16

உதிர்வு 1999 – 11 – 15

### அமரர் கொண்டையா நரசிம்மன்

கடந்த 15 – 11 – 99 அன்று இந்தியாவில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று [05 – 12 – 99] ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஜெகன் களஞ்சியம்,
கிருஸ்ணா களஞ்சியம்.

இல- 147, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[71511]


## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி! ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச் சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்:

**HOTEL SEIVAMS [ GUEST HOUSE ]**

T.P. No. 356522

No. 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA. COLOMBO– 13.

(71496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பண்புகள், ஆன்மீக விழுமியம் என்பன மிகச் சீரழிந்து செல்கின்றன!

## சர்வமத ஸ்தாபனம் கவலை தெரிவித்து அறிக்கை

கொழும்பு, டிசெ. 5
இலங்கையில் மனிதப் பண்புகள் மற்றும் ஆன்மீக விழுமியங்கள் சீரழிந்து செல்வதாகக் கொழும்பில் இயங்கும் சர்வமதஸ்தாபனம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இலங்கை மக்கள் அனைவரும் உலகநாடுகளின் கடனாளிகளாக மாறிவிட்டனர். அதேவேளை அரசியல் வன்முறைகள், ஊழல்கள் மற்றும் கொலைகள், பாலியல் வல்லுறவுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன எனக்குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது —

இலங்கை மக்கள் அதிகாரபலம், ஆடம்பரமான வாழ்க்கை என்பவற்றுக்காக பேராசை கொண்டவர்களாக மாறி வருகின்றனர். இதனால் ஊழல்கள், பழி வாங்கும் செயல்கள் என்பன அதிகரித்துள்ளன.

அதேவேளை இலங்கை மக்கள் அனைவரும் உலகநாடுகளின் கடனாளிகளாக மாறி விட்டனர். வறுமை, வேலை வாய்ப்பின்மை என்பன மக்கள் மத்தியில் தலைவிரித்தாடுகின்றன. வயது வந்தவர்களுக்கு மட்டும் என அடையாளம் இடப்பட்டு ஆபாசமான, இளம் சந்ததியை தவறான வழிக்கு அழைத்துச் செல்லும் திரைப்படங்கள் பொது அரங்குகளில் வைத்துக் காண்பிக்கப்படுகின்றன.

சில புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கூட மக்களின் மனதை கீழ்த்தரமான நிலைக்கு தள்ளியுள்ளன. இதன் விளைவாக நாடு பூராகவும் குற்றச் செயல்களும், பாலியல் ரீதியான வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

சகல மதங்களையும் சேர்ந்த மக்கள் அரசியலிலும் மதத்தலைவர்களிலும் கூட நம்பிக்கை இழந்துள்ளனர். எனவே மதத்தலைவர் இனியும் மௌனம் சாதித்துக் கொண்டு இருக்காமல் நாட்டின் நன்மைக்காக உழைக்க வேண்டும் பெரும் பணி தமக்கு உண்டு என எண்ணி செயற்பட வேண்டும். — என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# அபிவிருத்திக்கான கூட்டமைப்பு வடமராட்சியில் செயற்படும்

நெல்லியடி, டிசெ. 5
அபிவிருத்திக்கான சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பு வடமராட்சிப் பகுதியிலும் செயல் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் செ. செந்தூர்ராஜா தலைமையில் நடைபெற்றது.

சுவீடன் நாட்டு நிதி வழங்கும் நிறுவனத்தைச் சேர்ந்த 'டயக் கோணியர்' அமைப்பின் ஆசிய பிராந்திய செயலர் எரிக் நெல்கன், ஆசிய பிரதிநிதி செல்டேவன், இலங்கைப் பிரதிநிதி பிராங்ஸ் ரீபன், ஆகியோர் அங்கு சமூகமளித்திருந்தனர்.

இக் கூட்டத்தில் மக்களது தேவைகள், குறைகள் பற்றி ஆராயப்பட்டு எதிர்காலத்தில் கிராமிய நிறுவனங்களை வலுவூட்டுவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது. இத் திட்டத்தில் யாழ். மாவட்ட இணைப்பாளராக கே. சிங்காரம் நியமிக்கப்பட்டார்.

பல்வேறு சமூக நிறுவனப் பிரதிநிதிகள், கிராமசேவை அலுவலர்கள், உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர், (ஐ-109)

# கிராம அலுவலர்களுக்கு அரச காணியில் அலுவலகம்

## விரைவில் அமைக்க நடவடிக்கை

வலி. மேற்கு, டிசெ. 5
கிராம உத்தியோகத்தர்களுக்கான அலுவலகம் அரச காணிகளில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களுக்கு அரச காணிகளில் அலுவலகம் அமைத்துக் கொடுப்பது தொடர்பாக அமைச்சின் செயலாளர் மகிந்த பந்துசேன சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அடுத்த ஆண்டு சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தருக்கும் அரச காணிகளில் அலுவலகம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் —

இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் —

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ175)

# செயல் நூல் வெளியீடு

வடமராட்சி கல்வி அபிவிருத்திக்கழகம் ஆரம்பக்கல்வியை மேம்படுத்தும் பொருட்டு விசேட செயல் திட்டத்தின் கீழ் தரம் மூன்றுக்கான தமிழ்மொழி செயல் நூலை தயாரித்து வெளியிட்டுள்ளது.

நெல்லியடி வணிகர் கழகத்தின் ஆதரவுடன் சுணனி அச்சுப்பதிப்பில் வெளியிடப்பட்ட இந்நூல் வடமராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் தரம் ஆறு வகுப்புக்கான ஆங்கில பாடநூல் செயல் நூலும் வழிகாட்டலும் வெளியிடப்படுள்ளன. (ஐ-173)

# மின்தடை குறித்து சுன்னாகம் மின் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ 5
குடாநாட்டில் திடீரென ஏற்படும் மின்சாரத்தடை குறித்து பொதுமக்கள் தங்கள் முறைப்பாட்டை சுன்னாகம் மின் நிலையத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திடீர்திடீரென மின்வெட்டு ஏற்படும் போது அது குறித்து முறையிடுவோர் சுன்னாகம் மின் நிலையத்தின் தொலைபேசி இலக்கங்களான 070-212218, 070-212261 மற்றும் 3002 ஆகியவற்றுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் —

அங்கு தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் —

அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-3)

# கிராம அலுவலர் பிரிவுகளில் முகாமைத்துவப் போட்டி

வலி. மேற்கு, டிசெ. 5
கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கிடையே முகாமைத்துவப் போட்டியைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு நடத்தி வருகிறது.

மேற்படி போட்டியை முதலில் பிரதேசசெயலக பிரிவு மட்டத்தில் நடத்துமாறு அமைச்சு யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. இப் போட்டி இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இப் போட்டிக்கான நடுவர் குழு யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்களுக்கும் திடீர் பரிசோதனையை மேற்கொண்டு மதிப்பீட்டினை மேற்கொள்வார்கள் எனத் தெரியவருகின்றது. (ஐ-175)

# மீளாய்வு

வலிமேற்கு, டிசெ. 5
சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் விவரங்கள் சமூக சேவை உத்தியோகத்தரினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

கிராம உத்தியோகத்தர் பணிமனைகளில் வைத்தே மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. (ஐ-175)

# குடும்பஸ்தர் தற்கொலை

தென்மராட்சி, டிசெ. 5
நிரந்தர தொழில் கிடைக்காததால் வறுமையில் வாடிய மூன்று பிள்ளைகளின் தந்தை கயிற்றில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கிருபாகரன் (வயது 31) என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. யமுனானந்தா பிரேத பரிசோதனை நடத்தினார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்,

சந்திரபுரம் கிராம அலுவலர் கே. பரமானந்தம், சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மனோகரன், கான்ஸ்டபிள் கருணாரத்ன ஆகியோர் சாட்சிகளை நெறிப்படுத்தினர். (ஐ-117)

# தென்னங்கன்று விநியோகம்

வடமராட்சி, டிசெ. 5
வீட்டுத்தென்னைச் செய்கைக்கென புலோலி கமநல சேவை நிலையம் 150 பேருக்கு தலா இரண்டு நல்லினத் தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளது.

மூன்று வருடத்தில் காய்க்கக் கூடிய 'ஹைபிறைற்' வர்க்கத்தைச் சேர்ந்த தென்னங்கன்றுகளே வழங்கப்பட்டன.

கமநல சேவைகள் திணைக்களத்தால் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் ஏற்படுத்தப்பட்ட தென்னை நாற்று மேடைகளில் இத் தென்னங்கன்றுகள் பெறப்பட்டன. (ஐ-173)

# ஈ.பி.டி.பி. முகாமில் இரு இளைஞர்கள்

யாழ்ப்பாணம், டிசெ 5
தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே தாங்கள் சாவகச்சேரியிலுள்ள ஈ.பி.டி.பி. முகாமில் இருப்பதாக கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட இரு இளைஞர்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ் ஸ்ரீதரனிடம் தெரிவித்துள்ளனர்.

மிருசுவில், படித்த மகளிர் குடியிருப்புத் திட்டத்தைச் சேர்ந்த யோகரட்ணம் புவிகரன் (வயது 18), கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த இரட்ணசிங்கம் ஸ்ரீதரன் (வயது 15) ஆகிய இரு இளைஞர்களுமே ஈ.பி.டி.பி. முகாமில் உள்ளவர்களாவர்.

காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட இரு இளைஞர்களும் தற்போது ஈ.பி.டி.பி. முகாமில் இருப்பதாகவும் —

அவர்களை மீட்டுத் தருமாறும் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் சாவகச்சேரி ஈ.பி.டி.பி. முகாமுக்குச் சென்று முகாம் பொறுப்பாளர் அலெக்ஸாண்டர் சாள்ஸ் அன்ரனியுடனும் மேற்படி இரு இளைஞர்களுடனும் தொடர்பு கொண்டார். —

இளைஞர்கள் இருவரும் சொந்த விருப்பத்தின் பேரிலேயே தாம் ஈ.பி.டி.பி முகாமில் வந்து இருப்பதாகவும் —

இனிமேல் தாங்கள் வீட்டுக்குப்போகப்போவதில்லை என்றும் —

எழுத்து மூலம் தமக்குத் தெரிவித்திருப்பதாகவும் —

ஆணைக்குழு இணைப்பாளர் தெரிவித்தார். (ஐ-9)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்

யாழ்ப்பாணம், டிசெ. 5
தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாவகச்சேரி, பளைக் கோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களைப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் நிரப்புவதற்கு தென்மராட்சிக் கல்வி வலயம் நடவடிக்கை எடுத்துள்ளது

தகுதி உடையோர் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னராக இந்தப் பதவிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (க-133)

# மீண்டும் பிறக்காவிடில் தேவனுடைய இராஜ்யத்தைக் காணவே முடியாது

### ஞாயிறு நற்பிரசாதம்

ஒருவன் மறு படியும் பிறவாதுவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காண முடியாது. இது இயேசு பெருமான் உலகுக்கு அருளிய மறுமலர்ச்சியின் வாழ்வு. இந்த மகத்தான மறு மலர்ச்சியின் வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் மனிதன் இதுவரை உலகில் செய்து கொண்டிருக்கும் துன்மார்க்கமான காரியங்களான கொலை. கொள்ளை, விபசாரம். களவு, வழிப்பறி, கொள்ளைலாபம் அடித்தல், பதுக்கல், போலி. வாழ்வு உரிமைகளைப் பங்கிடு செய்யாத மாய் மாலங்கள். இவைகளில் இருந்து மனிதன் தன்னைத் தப்புவித்துப் புது வாழ்வை அடைவதற்கு அவன் மறுபடியும் பிறக்க வேண்டியவனாக இருக்கின்றான்.

மறுடியும் பிறப்பதென்பது, பலருக்குப் புரிந்தும் புரியாத புதிராக இருக்கின்றது. இந்தப்பிரபஞ்சத்தின்பிசாசானவன் மனிதர்களுடைய இருதயத்துக்குள் நுழைந்து. தொடாதே தீண்டாதே, ருசிபாராதே என்ற மனித கற்பனைகளின் படி நடப்பித்து தெய்வீக ஞானத்தைக் கெடுத்து விடுகின்றான்.

இருளான மாயைக்குள் சிக்கியிருக்கின்ற மனிதன் பொய்யான வெளிச்சத்துக்கு வர வேண்டியவனாக இருக்கின்றான், இவன் மறுபடியும் பிறக்க வேண்டியவனாகவும் இருக்கின்றான். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற அந்தஒளியே மெய்யான ஒளி, அந்த நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் கடவுளுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்குப் புது வாழ்வைக் கொடுத்தார்.

அவரே பரிசுத்த திருத்தாயின் மடியில் மழலையாய்த் தவழ்ந்து பூமியில் மனித வாழ்வை வாழ்ந்து காட்டி இன்றும் மனுக்குலத்தின் நல்வாழ்வுக்காய், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்ற. முழுமுதற் தெய்வமாகிய இயேசு கிறிஸ்து ஆவர். தம்முடைய அன்பின்

சகோதரன்
**க. திருவம்பலம்**

தொனியை உலகுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். அதுவே புது வாழ்வு மறு மலர்ச்சியின் வாழ்வு மறுபடியும் பிறக்கின்ற வாழ்வு, இந்தவாழ்க்கைக்குள் மனிதர்கள் வரும்பொழுது உலகம் சாந்தியடைகின்றது. உள்ளம் உவகையடைகின்றது. இரட்சிப்பின் ஊற்றுக்களில் இருந்து சுரந்தோடும் ஜீவ ஊற்று, கடவுளின்மகிமையை உலகுக்குப் பறைசாற்றுகிறது. அந்த ஊற்றில் மூழ்கி ... ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சூழல்பாதுகாப்பு படையணி பாடசாலைகளில் அமையும்

பருத்தித்துறை, டிசெ. 5

நாட்டிலுள்ள பாடசாலைகளில் சூழல் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு மாணவர்களைக் கொண்ட சூழல் சுற்றாடல் பாதுகாப்புப் படையணி ஒன்றை உருவாக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தரம் ஏழாம் வகுப்பிலிருந்து அல்லது மேல் வகுப்புவரை உள்ளடக்கி பாடசாலைகள் தோறும் இப் பாதுகாப்புப் படையணி உருவாக்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் உள்ள பௌதிகவளங்களையும் சூழல் சுற்றாடல்களையும் பாதுகாப்பதுடன் பூந்தோட்ட, மர வளர்ப்புகளை மேற்கொள்ளுதலும் இப் படை அணியின் முக்கிய கடமைகளாகும்.

இப்படையணி பாடசாலை அதிபர், முன்னோடிப்பொறுப் பாசிரியர்கள் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுவர். இதற்கென தெரிவு செய்யப்பட்ட படையணி மாணவர்களுக்கு தனியான சீருடை வழங்கப்படவுள்ளது.

இப்படைஅணியில்ஐந்துபேர் கொண்ட குழு வீதம் ஐந்து குழுக்கள் செயற்படும். ஐந்து குழுக்களையும்ஒன்றிணைத்து பிரதம தலைவர், பிரதித் தலைவர், உதவித் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

நாட்டிலுள்ள 25மாவட்டங்களில் 20மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள்தோறும் சூழல் சுற்றாடல் பாதுகாப்பு படையணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இப் படையணியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை கல்வித்திணைக்களமும் சூழல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

பாடசாலைகள் தோறும் அமைக்கப்படும் படையணியின் முன்னோடிப் பொறுப் பாசிரியர்களுக்கு சூழல் பாதுகாப்பு அதிகாரசபையும் கல்வி அமைச்சும் இணைந்து கொழும்பில் இலவச பயிற்சிகளை வழங்கவுள்ளன.

[ஐ-118-173]

## ஊர்காவற்றுறைச் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம், டிசெ 5

ஊர்காவற்றுறை மத்திய சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் சார்பில்விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக சந்தையின் பல இடங்களிலும் மழைநீர் தேங்கியுள்ளது எனவும் —

கழிவு நீர் வாய்க்கால்கள் திருத்தம் செய்யப்படாமையால் கழிவுநீர் தேங்கியுள்ளது எனவும் — இதனால் நுளம்பு உற்பத்தி அதிகரித்துள்ளதுடன், இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளது எனவும் —

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

தேநீர்க்கடைகள் மற்றும் மீன் விற்பனை நிலையம் ஆகியவற்றிலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப் படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது

இதேசமயம் —

கடந்தகால வன்செயல்களின் போது பலத்த சேதமடைந்த மத்திய சந்தையின் கட்டடங்கள் புனரமைக்கப்படவில்லை.

(ஐ-7)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

நெல்லியடி, டிசெ. 5

வீட்டிலுள்ளோர் உறங்கிய நேரம் பார்த்து அங்கு உள்புகுந்த திருடர்கள் நீர் இறைக்கும் இயந்திர அறையில் இணைக்கப்பட்டிருந்த 8 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திரத்தைகழற்றிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இத்திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு புலோலி தெற்கு சூசையப்பர் ஆலய வீதியில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது.

இதுகுறித்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(ஐ,109)

## குடிதண்ணீர்பவுஸர் அன்பளிப்பு

வேலணை, டிசெ, 5

வேலணைபிரதேசசபைக்கு குடிதண்ணீர்பவுஸர்வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

''யுனிசெவ்'' அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த பவுஸரை யாழ். செயலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் வேலணைபிரதேசசபை தலைவர் த. கருணாகரகுருமூர்த்தியிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார். (ஐ-167)

## போஷாக்கு நிலையங்களை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம். டிசெ 5.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் நீண்டகாலமாக இயங்காதிருக்கும் குழந்தைகளுக்கான போஷாக்கு நிலையங்களை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறை. காரைநகர் மற்றும் எழுவைதீவு அனலைதீவு ஆகிய இடங்களில் இயங்கிவந்தபோஷாக்கு நிலையங்களையே மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் இயங்கிய மேற்படி நிலையங்களால் நூற்றுக்கணக்கான குழந்தைகள் நன்மை பெற்றனர்.

இதேவேளை —

கடந்த செவ்வாயன்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதார அதிகாரிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

(ஐ-7)

## ஆஸ்பத்திரிகளுக்கு பணிப்பாளர் திடீர் விஜயம்

திருநெல்வேலி, டிசெ 5

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு யாழ் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி சிவபாதம் திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டு வருகின்றார்.

சில வைத்தியசாலைகளுக்கு இவர் திடீர் விஜயம் செய்தபோது ஊழியர்கள் நேரம் பிந்திக் கடமைக்குச் சமுகமளித்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

(ஐ-135)

## திருநெல்வேலியில் திருட்டுக்கள் அண்மைக்காலமாக அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ 5

திருநெல்வேலிப் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன இதனால் இரவு வேளைகளில் பொதுமக்கள் பீதியுடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி மேற்கில் உள்ள தாளையடி வீதி, நாவலடி லேன் மற்றும் பிள்ளையார் வீதி, மாரியம்மன் வீதியிலும், பலாலி வீதி, அரசடி லேன், அம்மன் வீதி ஆகியவற்றிலுமே இவ்வாறு திருட்டுச் சம்பவங்களும் திருட்டு முயற்சிகளும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன

தாளையடி வீதியில் உள்ள வீடொன்றில் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் றேடியோ மற்றும் சுவர்மணிக்கூடு ஒன்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

நாவலடிலேனில் உள்ள வீடொன்றின் பின்பக்க ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்த திருடரின் திருட்டு முயற்சிவீட்டு உரிமையாளரின் கூச்சலைத் தொடர்ந்து முறியடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தாளையடி வீதியில் வசிக்கும் குடும்பப்பெண் ஒருவரின் மூன்று பவுண் நிறையுள்ள சங்கிலி ஒன்றும் நாவலடி லேன் ஊடாக அவர் சென்று கொண்டிருந்த சமயம் சைக்கிளில் வந்த ஒருவரால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் — பலாலி வீதியில் உள்ள வீடொன்றில் ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்களால் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் ரீ.வி. றேடியோ மற்றும் பெறுமதிமிக்க சேலைகள், சில்வர் பாத்திரங்கள் என்பனவும்திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இராணுவ நடமாட்டங்கள் மற்றும் அச்சம் காரணமாக அயலவர்கள் கூட வீட்டுக்கு வெளியே வர அஞ்சுகின்றனர் என பொருள்களையும் பணத்தையும் பறிகொடுத்த திருநெல்வேலி தாளையடி வீதியைச் சேர்ந்த வாசி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

(ஐ-7)

## சிறப்பு விரிவுரை

வடமராட்சி, டிசெ. 5

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜெனன தினத்தை ஒட்டி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி தலைமையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிறப்பு விரிவுரை இடம்பெறவுள்ளது.

'மனித முன்னேற்றம்' என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா விரிவுரையை நிகழ்த்துவார்.

(ஐ-1[illegible])


## கண்ணீர் அஞ்சலி

எமது சமாசப் பணியாளர்
செல்வன் ம. அனங்கன்
அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் மகாலிங்கம் இரத்தினாவதி

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10096)

## கண்ணீர் அஞ்சலி

இராமநாதன் இசைக்கல்லூரி
இசை ஆசிரியரும் எமது மைத்துனருமாகிய
சங்கீதவித்துவான்

### சிவத்திரு. சு. ஐயாக்கண்ணு தேசிகர்

அவர்கள் 19—11—99 மதுரையில் சிவபதம் எய்தியதையிட்டு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்
அம்பாள் தேவஸ்தானம்.
வழக்கம்பரை, சுழிபுரம்.

(சி/10095)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் ஆர்த்தி ஜுவலரி, கொழும்பு கௌரி ரெக்ரைல்ஸ் உரிமையாளரும் பாலர்கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் திருநெல்வேலி ஞானக் குழந்தை பாடசாலைக் கட்டட உரிமையாளருமாகிய

### திரு. விஸ்வரட்ணம் சிவலோகநாதன்

அவர்களின் மறைவையிட்டு அவரின் ஆத்மா சாந்தி அடைய அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாலர் கல்விக்கழக செயலாளர்,
பாடசாலை ஆசிரியர்கள், செயலாளர்,
பெற்றோர், மாணவர்கள்

71541)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
10
—
09
—
1938



விண்ணில்
06
—
11
—
1999

### அமரர் இராமலிங்கம் இராஜகுலசிங்கம்

(தலைவர், MPCS சாவகச்சேரி)

எமது குடும்பத் தலைவர் சிவபதமெய்திய செய்தி அறிந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி, பலவித உதவிகள் செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (5—12—99) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரி, மைத்துனர்.

'' சக்தி ''
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி/10090)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலனோன்பு நிலையங்களை புனரமைக்க நிதிஉதவி

தென்மராட்சி, டிசெ. 5

பளைப் பிரதேசத்திலுள்ள நலனோன்பு நிலையங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள வீடுகளை மேம்படுத்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வடபகுதி மீள்குடியமர்வு, புனரமைப்பு அதிகாரசபை ஆகியவை முன்வந்துள்ளன.

முகாம்களில் தங்கியுள்ள மக்கள் குடியிருக்கும் வீடுகளை அரை நிரந்தர கட்டடமாக அமைக்க வடபகுதி மீள்குடியமர்வு புனரமைப்பு அதிகார சபையினர் 25 ஆயிரம் ரூபாவையும் —

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் இவ்வீடுகளுக்கான கூரைத் தகடுகளையும் — வழங்கியுள்ளது.

கூரைத் தகடுகள் ஏற்கனவே குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் அரை நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான முதல் கட்டக் கொடுப்பனவுகள் வங்கியூடாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் புலோப்பளை, கிளாலி இந்திராபுரம் ஆகிய இடங்களில் நலனோன்பு நிலையங்கள் உள்ளமை குறுப்பிடத்தக்கது.

## பளைப் பிரதேசத்தில்

# கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிப்பு

தென்மராட்சி, டிசெ. 5

பளைப்பிரதேசத்தில் காலபோக விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கால்நடைகளின் உரிமையாளர்கள் அவற்றினைக் கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக அலைந்து விவசாயப் பயிர்கள, சந்தைகள் போன்ற இடங்களில் சேதங்களை உண்டாக்கும் கால்நடைகள் பிடிக்கப்பட்டால் பிடிக்கப்படும் கட்டணம், சேதங்களுக்கான நட்டஈடு, பராமரிப்புச் செலவு போன்றவற்றைச் செலுத்தவேண்டி நேரிடும் எனவும்—

குறிப்பிட்ட நாள்களில் மீட்கத் தவறின் அவை பகிரங்கஏலத்தில் விடப்படும்எனவும் —

பளை கமநல நிலையத்தினரும் பளைப் பிரதேச சபையினரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

(ஐ-117)

# கூட்டுறவுத் திணைக்களத்துக்கு அலுவலகம் அமைக்க நிதி

அரியாலை, டிசெ 5

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்துக்கு ஓர் அலுவலகத்தை காணியுடன் கொள்வனவு செய்வதற்காக 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

யாழ். கூட்டுறவுத் திணைக்களத்திற்கு சொந்த கட்டட வசதிகள் இல்லாமையால் மாதாந்தம் வாடகை செலுத்தியே திணைக்கள அலுவலகம் தற்போது செயற்பட்டு வருகின்றது.

திணைக்களத்திற்கென சொந்தக் காணியுடன் கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்யும் பொருட்டே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரியில் புதிய கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்து அந்தக் கட்டடத்தில் திணைக்கள அலுவலகத்தை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-17)

# வேலணையில் தடைப்பட்டுள்ள மின்சாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

வேலணைப் பிரதேசத்துக்கானமின் விநியோகம் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாகத் தடைப்பட்டுள்ளது.

இதனால் வேலணைப் பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

# தளபாட வசதிகள் இன்றி முன்பள்ளிச் சிறுவர்கள் அவதி

வலி, கிழக்கு, டிசெ. 5

இருபாலை கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி நிலையம் ஒன்றில் தளபாட வசதியின்மையினால் கல்வி கற்கும் சிறார்கள் கொட்டும் மழையிலும் ஈர நிலத்தில் இருந்து கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபாலை கிழக்கில் உள்ள வசந்தநிலா முன்பள்ளியில் கல்வி பயிலும் 40 மாணவர்களே இவ்வாறு கல்வி கற்று வருகின்றனர்.

'யுனிசெவ்' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளி நிலையத்துக்கு நீண்டகாலமாக தளபாடங்கள் எவையும் வழங்கப்படவில்லை என அப்பகுதி பொது அமைப்புக்கள் கவலை தெரிவித்தன..

(ஐ-180)

# உள்ளூர் அழைப்புகளுக்கு அதிக கட்டணம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் உள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் அழைப்புகளுக்கு பொதுமக்களிடம் இருந்து அதிக கட்டணம் அறவிடப்படுவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ். நகரப் பகுதிக்குத் தொடர்பு கொள்ளும் ஒருவர் ஒரு நிமிடத்துக்குப் பத்து ரூபாவைக் கட்டணமாகச் செலுத்தவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

# மருந்தகம் இடமாற்றம்

வலி மேற்கு. டிசெ. 5

சங்கரத்தைச்சந்திக்கு அண்மையில் தனியாருக்குச் சொந்தமான வீடு ஒன்றில் பல வருடங்களாக இயங்கி வந்த வட்டுக்கோட்டை அரசினர் மருந்தகம் அண்மையில் மாவடிச்சந்தியிலுள்ள தனியார் வீடு ஒன்றுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

(ஐ-13)

# சாரதாதேவி ஜன்ம தினம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஜன்ம தினம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா தேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இந்தத் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி, கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா சிறப்பு விரிவுரை ஆற்றுவார்.

(இ-8)

# பரீட்சை மண்டபம்மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

நாளை ஆரம்பமாக உள்ள ஜி சீ ஈ சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெற ஏற்பாடாகி இருந்த இரு பரீட்சை நிலையத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலை விக்னேஸ்வரா ம.வி இல் அமைய இருந்த பரீட்சை மண்டபம் இலக்கம் —2 அல்லாரை அ.த.க.பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(இ-6)

# உதைபந்தாட்டம்

சிறுவர், முதியோர் ஊனமுற்றோர் நலன் காக்கும் நிதிக்காக வலி. வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் காட்சி உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்ற உள்ள அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பாடும்மீன் வி.க. எதிர் ஞானமுருகன் வி.க

★ யுத்தி வி.க. எதிர் சென் மைக்கல்ஸ் வி.க.

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம் டிசெ. 5

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிஇடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

## யாழ்ப்பாணம்

(112572ஏ), (116225ஏ), (117866ஏ), (118012ஏ), (118018ஏ), (118041ஏ), (118041பி), (118041சி), (118049ஏ), (118049பி), (118049சி), (118058ஏ), (118058பி), (118058சி), (118059ஏ), (118059பி), (118061ஏ), (118065ஏ), (118066ஏ), (118066பி), (118066சி), (118086ஏ), (118098ஏ), (118115ஏ), (119742ஏ), (119742பி), (119742சி), (119764ஏ), (119764பி), (119764சி), (119764டி), (120292ஏ), (120548ஏ), (120548பி), (120548சி), (120558ஏ), (120735ஏ), (122488ஏ), (122499ஏ), (122531ஏ), (122569ஏ), (122591ஏ), (122591பி), (122608ஏ), (122608பி), (122613ஏ), (122616ஏ), (122687ஏ), (122687பி), (122687சி), (122693ஏ), (122693பி), (122721ஏ), (122721பி), (122733ஏ), (122733பி), (122800ஏ), (124504ஏ), (124511ஏ).

## ஊர்காவற்றுறை

(12231 ஏ),

## கோப்பாய்

(104148 ஏ), (109740ஏ), (110094 பி), (116564 பி), (116733ஏ), (116733பி), (116733சி), (116734ஏ), (116740ஏ), (116961ஏ), (119500ஏ), (119500பி), (119500சி), (123131ஏ), (123131பி), (123192ஏ), (123202ஏ), (123202பி).

## நல்லூர்

(104279ஏ), (109932ஏ), (117575ஏ), (119637ஏ), (119637பி), (123195ஏ), (120530சி), (120530டி), (120530ஈ), (120531ஏ), (120534ஏ), (120534பி), (120534சி), (120567ஏ), (120595ஏ), (120595பி), (120662ஏ), (120662பி), (120668சி), (122449ஏ), (122617ஏ), (122617பி), (122727ஏ), (122731ஏ), (122808ஏ),

## பருத்தித்துறை

(085434பி), (095460பி), (095460சி), (095460டி), (095460ஈ), (102863பி), (106951ஏ), (106951பி), (108324ஏ), (108324பி), (108368ஏ), (108368பி), (111206ஏ), (111220ஏ), (113559ஏ), (118807ஏ), (118871ஏ), (118876ஏ), (118979ஏ), (119095ஏ), (119137ஏ), (119782ஏ), (119914ஏ), (119914பி), (119914சி), (119996சி), (188742ஏ), (188742பி)

## உடுவில்

(125419பி)

## வேலணை

(12175ஏ), (12175பி), (12175சி), (12190ஏ), (12190பி), (12190சி), (12231பி), (12341ஏ), (12343சி), (12344ஏ), (12348ஏ), (12349ஏ), (12349பி), (12350ஏ), (12351ஏ), (12367ஏ),

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களில் (இம் மாதம் 2 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

## சங்கானை

(117116 ஏ), (117116பி), (125423 ஏ), (127029 ஏ), (127478 ஏ).

## யாழ்ப்பாணம்

(115889ஏ), (115889 பி), (122573 ஏ), (122797 ஏ), (124581 ஏ), (124581 பி), (134581 சி), (124582 ஏ), (124582 பி), (121582 சி), (124593 ஏ), (124593 பி), (124632 ஏ), (124640 ஏ), (124677 ஏ), (124677 பி), (124684 ஏ), (124684 பி), (124714 ஏ), (124789 ஏ), (124793 ஏ), (124793 பி), (124864 ஏ), (124864 பி), (124864சி), (124945ஏ), (124945பி), (126546ஏ), (126546பி), (126610ஏ), (126620ஏ), (126621ஏ), (126622ஏ), (126653ஏ), (126660ஏ), (126663ஏ), (126663பி), (126664ஏ), (126664பி), (126664சி), (126676ஏ), (126676பி), (126676சி), (126692ஏ), (126692பி), (126710பி), (126710சி), (126710டி), (126714ஏ), (126714பி), (126733ஏ), (126754ஏ), (126771ஏ), (126771பி), (126780ஏ), (126780பி), (126789ஏ), (126789பி), (126789சி), (126789டி), (126789ஈ), (126789எப்), (126804ஏ), (126810ஏ), (126820ஏ), (126841ஏ), (126841பி), (126857ஏ), (126857பி), (126857சி), (126862ஏ), (126862பி), (126862சி), (126862டி), (126868ஏ), (126868பி), (126883ஏ), (126889ஏ), (126889பி), (126889சி), (126889டி), (126891ஏ), (126933ஏ), (126937ஏ), (126939ஏ), (126951ஏ), (126955ஏ), (126972ஏ), (126972பி), (126972சி), (126981ஏ), (126984ஏ), (126987ஏ), (126987பி), (126987சி), (126987டி), (126987ஈ), (126987எப்), (127001ஏ), (127002ஏ), (133321ஏ), (133322ஏ), (133323ஏ), (133372ஏ), (133397ஏ), (126710ஏ).

## ஊர்காவற்றுறை

(12502ஏ), (12502பி), (12507ஏ), (12507பி), (12507சி), (12507டி), (12518ஏ), (12518பி), (12524ஏ), (12529ஏ), (12530ஏ).

## கோப்பாய்

(121078ஏ), (121078பி), (124204ஏ), (124207ஏ), (124207பி),

## மருதங்கேணி

(085100ஏ), (085100பி), (085100சி),

## நல்லூர்

(124201ஏ), (124719ஏ), (124956ஏ), (126710ஏ), (126751ஏ), (126762ஏ), (126793ஏ), (126793பி), (126793சி), (117110ஏ), (117110பி), (121700ஏ), (121700பி), (121700சி), (121700டி), (121700ஈ), (121700எவ்), (121701ஏ), (121701பி), (121701சி), (125441ஏ), (125441பி), (125441சி), (113441டி), (127283 ஏ), (127283பி), (127293 ஏ), (127329 ஏ), (127390 ஏ), (127421 ஏ), (127448 ஏ), (127457 ஏ),

## பருத்தித்துறை

(132718 ஏ)

## சண்டிலிப்பாய்

(124982 ஏ), (124982 பி), (124982 சி), (124982 டி), (125110 ஏ), (125110 பி), (125110 சி), (125149 ஏ), (127379 ஏ), (127379 பி), (127379 சி).

## தெல்லிப்பழை

(125366 ஏ), (125378 ஏ), (127385 ஏ), (127385 பி).

## உடுவில்

(121256 ஏ), (123858 ஏ), (127050 ஏ) (127079ஏ), (127079பி), (127213ஏ), (127399ஏ), (127400ஏ), (127464ஏ), (127464பி),

## வேலணை

(12519ஏ), (12519பி), (12532ஏ), (12533ஏ), (12542ஏ), (12543ஏ),

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 3 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

## சாவகச்சேரி

(126258 ஏ), (126277ஏ), (126280 ஏ), (126280 பி), (126302 ஏ), (126302 பி), (126302 சி), (126036 ஏ), (126036 பி), (126036 சி), (126036 டி), (126043 ஏ), (126043 பி), (126057 ஏ), (126063 ஏ), (126071 ஏ),

## யாழ்ப்பாணம்

(124459 ஏ), (133363ஏ), (133364 ஏ), (133385 ஏ), (133386 ஏ).

## கோப்பாய்

(122966 ஏ), (122966 பி), (124079 ஏ), (124079 பி), (124201 ஏ), (124202 ஏ), (124202 பி), (133122 ஏ),

## நல்லூர்

(122995ஏ), (124253ஏ), (124254ஏ), (124255ஏ), (124256ஏ), (124294ஏ), (124327ஏ), (124331ஏ), (124337ஏ), (124411ஏ), (124457ஏ), (133140ஏ), (126801ஏ), (126949ஏ).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (நவம்பர் மாதம் 25 ஆம்திகதி வரை) பதிவு இலக்கங்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வருமாறு:

(125518சி), (125518டி), (125524ஏ), (125527ஏ), (125527பி), (125527சி), (125600ஏ), (125618ஏ), (125748ஏ), (125748பி), (125857ஏ), (125857பி),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

மும் எமது மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மிதித்துத் துவைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் யாருக்கு வாக்களிப்பது?

தமிழ் இனத்தின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் வாசுதேவ நாணயக்காரவுக்கு ஆளும் கட்சி வேட்பாளரைத் தோற்கடிக்கும் வலிமையும் வாய்ப்பும் கிடையாது.

இந்த வலிமையையும் வாய்ப்பையும் கொண்டிருப்பவர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரே!

அதே நேரத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தாம் வெற்றியீட்டினால் போரை நிறுத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் போவதாக அறிவித்திருக்கின்றார் இந்த முயற்சியல் மூன்றாம் தரப்பு ஒன்றின் உதவியையும் பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்திருக்கின்றார்

சமாதானத்துக்கான சாத்தியம் முற்றாக அற்றுப்போய் விடவில்லை என்ற நம்பிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் இந்த நிலைப்பாடு தோற்றுவித்துள்ளது.

போர் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் எமது மக்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்து ஆக்கபூர்வமாக தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும்.

வாக்குரிமை என்பது ஓர் பலமான அரசியல் ஆயுதம். இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டுவர நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டு அண்மிக்கும் வேளையில் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண எமது இனம் வழங்கும் கடைசிச் சந்தர்ப்பம் இது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளக் கூடிய விதத்தில் ஆளுங் கட்சி வேட்பாளரை எதிர்த்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தும் எமது மக்கள் தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது இனத்தின் எதிர்கால நலனுக்காக எம் முன்னால் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் நாம் தவறவிடக் கூடாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-8-21)

## துப்பாக்கிச்சூடு ...

(முதலாம் பக்கத் தொடர்)

நபர்களினால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

இந்தத் துப்பாக்கிச் சூட்டின் போது மூன்று பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Institute of Informatics Studies
100 Clock Tower Road, Jaffna.
( Affiliated with IMIS, UK. )

Telephone: 2831 Email: IIS @sltnet. lk

SRILANKA COMPUTER DRIVING LICENCE COURSE

இலங்கையின் ACTOS ( Association of Computer Training Organizatinns ) எனும் அமைப்பு CINTEC ( The Council for Information Technology ) மற்றும் NAITA ( National Apprentice & Industrial Training Authority ) எனும் அமைப்புகளுடன் இணைந்து மேற்படி பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக் கற்கை நெறி நாடு பூராகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அத்துடன் மாணவர்களின் கணனித்துறைசார் தகைமைகளையும், திறமைகளையும் வெளிக் கொண்டு வருவதாகவும் அமைந்துள்ளது.

IIS இப் பரீட்சைக்கு உங்களுக்கு வழிகாட்டுகின்றது...

★ IIS இன் ஊடாகவே மேற்படி பரீட்சைக்கு நீங்கள் சிறந்த முறையில் தயாராகலாம்.

★ எமது கல்வி நிறுவனத்தில் 96 ஆம் ஆண்டு முதல் Diploma in MS - Office கற்கை நெறியினை முடித்துக் கொண்ட மாணவர்கள் மேலும் எமது நிறுவனத்தில் 3 வார கால (Internet, E mail) பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் மேற்படி பரீட்சைக்குத் தோற்ற தகுதியானவர்களே.

★ தற்பொழுது Diploma in MS - Office கற்கை நெறியை எமது நிறுவனத்தில் பயின்று வரும் மாணவர்களும், எதிர்வரும் கல்வி ஆண்டுகளில் எமது நிறுவனத்தில் இணைந்து கொள்ள இருக்கும் மாணவர்களும் மேற்படி பரீட்சைக்கு நேரடியாகத் தோற்றத்தக்க வகையில், உரிய பாடத்திட்டங்கள் அடங்கியதாகவே கற்பிக்கப்படும். மேலதிகமாக எக்கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

★ எமது நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில் திட்டத்தில் இணைந்து கொள்வதன் மூலம் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

★ மேற்படி கற்கைநெறி / பரீட்சை தொடர்பான கருத்தரங்கு ஒன்று 30 - 12 - 99 ஆம் திகதி பகல் 10 00 மணிக்கு எமது நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- Director

(சி/10094)

# இடைக்கால நிர்வாக சபை நிறுவி

# இயல்பு நிலை திரும்பிய பின்னரே நிரந்தர தீர்வுக்கான பேச்சுவார்த்தை

## ரணில் தெரிவிப்பு

லண்டன், டிசெ. 5

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அங்கு இயல்புநிலை திரும்பிய பின்னரே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டுவது குறித்த இறுதி நடவடிக்கைகள் பற்றி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு (TBC) வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகெங்கும் உள்ள தமிழர்களிடம் இருந்தும் சேகரிக்கப்பட்ட கேள்விகள் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கப்பட்டன.

''அனைவருக்கும் வணக்கம்'' என்று தமிழில் கூறியபடி அவர் தனது பேட்டியை ஆரம்பித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு — கிழக்கு இனப் பிரச்சினைக்கான தீர்வு மிக நீண்ட காலத்துக்கு இழுத்தடிக்கப்பட்டு விட்டது. நான் ஜனாதிபதியாக வந்ததும் முதலில் மேற்கொள்ளும் நடவடிக்கை வன்னிக்கு உணவு அனுப்புவதே. ஜனாதிபதி என்ற நிலையில் அது எனது கடமையாகும்.

விவசாயம் மேற்கொள்வதற்கு உள்ள தடைகளும் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளும் நீக்கப்படும்.

அதேநேரத்தில் — விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும். இயல்பு நிலையை உருவாக்கி சமாதானத்தை ஏற்படுத்த இந்த நடவடிக்கை மிக முக்கியமானதாகும். இது ஒரே இரவில் நடைபெறக் கூடிய மாற்றம் இல்லை. அங்கு ஒரு நிர்வாக முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த நிலைமையில் வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்படும் இந்த இடைக்கால நிர்வாக சபை அரசமைப்புக்கு உட்பட்டதாக அமைக்கப்படும். இந்த இடைக்கால நிர்வாக சபையில் மூன்று இனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

இந்தச் சபை விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கியதாகவே அமையும். இதில் புலிகளின் பிரதிநிதித்துவம் முக்கியமானதாகும் வடக்கு — கிழக்கில் இயல்பு நிலை ஏற்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகளில் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

அதேசமயம் —

இயல்பு நிலையைக் கொண்டு வருவதில் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்புடனும் நான் கலந்துரையாடல்களை நடத்துவேன்.

அவர் இப்படிகூறினார் (இ-6)

## இரு பிரதான ...

(முதலாம் பக்கத் தொடர்)

கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நீண்ட நேர விவாதத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவையோ அல்லது ஐ. தே. க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையோ ஆதரிப்பது இல்லை என்றும் தமிழ் மக்கள் அந்த இரு வேட்பாளர்களையும் எதிர்த்து வாக்களிக்கவேண்டும் என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டும் என்பது குறித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு விரைவில் கூடி முடிவுசெய்யும் என்றும் —

அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து விரிவான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் — தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட எம்பியுமான ஆர். சம்பந்தன் நேற்று இரவு தெரிவித்தார். (இ)

## 2 தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் குண்டு வெடிப்பால் வங்கியின் இலத்திரனியல் பரிவர்த்தனை அலகு சேதமானதாக தெரிவிக்கப்பட்டது. வங்கியில்இருந்து பணத்தை மீளப் பெறுவதற்காக காரில் வந்த ஒருவரே அந்தக் குண்டை அங்கு வைத்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அதேசமயம் —

வெள்ளவத்தையில் உள்ள செலான் வங்கியின் தானியங்கி காசு இயந்திரத்தின் அருகே குண்டொன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அது குறித்து பொலீஸாருக்கும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டது.

குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அந்த குண்டை செயலிழக்கச் செய்ய முயன்ற போது பிற்பகல் 2.30 மணியளவில் அது திடீரென வெடித்தது. இதனால் இரண்டு பேர் காயமடைந்தனர்.

(இ-6-5-21)

## ஒளி விழா

பளைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நடத்தும் ஒளிவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகா நாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும்.

## மருந்துகளைப்...

(இரண்டாம் பக்கத்தொடர்)

யில் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இங்குகுளிர்சாதனப்பெட்டி இல்லாத காரணத்தினால் குளிரில் வைத்து பாதுகாக்கப் படவேண்டிய மருந்து வகைகளை குறிப்பாக ஊசி மருந்துகளை பேணிப் பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்தப் பகுதியில் ஓர் அரச மருத்துவமனை இருந்தும் அங்குள்ள மக்கள் சிகிச்சைக்காக பலசிரமங்கள், அசௌகரியங்கள் மத்தியில் யாழ் நகருக்கு செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது

## பெற்றோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கம், கடல் தொழிலாளர் சங்கங்களின் ஒன்றியம் ஆகியவற்றுக்கு மனித உரிமைகளின் இணையம் அழைப்பு விடுத்துள்ளது

போராட்டத்தில் பங்குபற்றிபோராட்டம் வெற்றி பெற உதவுமாறு மனித உரிமைகளின் இணைய தலைவர் வண. பிதா ஆர். ஜெயக்குமார் கேட்டுள்ளார். (இ)

## மருச்சந்தி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பதில் இழுபறி நிலை இருந்து வந்தது தெரிந்ததே.

நாளை ஆரம்பமாகவுள்ள இத்தப் பரீட்சை இம்மாதம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 74 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும்.

(7 ஆம் பக்கத்தில் உள்ள ஆசிரிய தலையங்கம் வினாத் தாள்கள் அனுப்பி வைக்கப்பட முன்னர் எழுதப்பட்டது)

(இ-6-164-31)

வாழ்த்துகள்

A/L 2002 - க்காக O/L 1999 பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துகள்

D. M. I.
யாழ்.நகர்.
D. SAM

(சி/100 97)

கணக்கீடு
திரு. பாலவாசன்
A/L 2000
கம்பனி
ஆரம்பம்: 06 12 1999
Mon. 4. 30 p m.
SHAMROCK
(சி/10101)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு 2000
தரம் 1 முதல் O/L வரை
புதிய பிரிவு ஆரம்பம்: 06-12-99
திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி

புலமைப் பரிசில் - 2000
தரம் 5 இற்கான விசேட பயிற்சி வகுப்பு
ஆரம்பம்: 06 12-99 திங்கட்கிழமை

★ மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடத்தப்படும்.
★ தரம் 5 இற்கான மாதிரிப்பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும் நடத்தப்படும்.

(71515)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org